ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

மலர் 49 | சுக்கில ஆண்டு பங்குனித்திங்கள் 10—4—[illegible] | இதழ் 5

நான்மறையின் தனித்துணையாம் ஞானத்தின் திருவுருவம்



தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத்திங்கள்இதழ்

மலர் 49 | 10-4-90 | இதழ் 5

உட்பொருள்

எண் பக்கம்

1 அறநிலையங்களின் அரசின் குறுக்கீடு ... 217

2 தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை — 222

3 நம்மைப் பேணும் அம்மை ... 227

4 மணிக்கடலில் முகந்த சில முத்துக்கள் ... 230

5 இன்றைய வாழ்விற்குக் கம்பராமாயணம் ... 233

6 காவியத்தில் திருப்புமுனைகள் ... 238

7 சுந்தரமூர்த்திசுவாமிகளின் வரலாற்றுச் சிந்தனை ... 243

8 போதமும் சித்தியும் ... 247

9 புகழ்த்துணையார், கோட்புலியார் ... 249

10 செய்திகள் ... 255

11 எதிர்காலம் — 258

12 ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயில் பெருவிழா சிறப்புத் திருநாள் விபரம் ... 264

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

ஈசனையே காண
 வெனத்தவமுன் செய்ததெலாம்
மோசமாய் வந்து
 முடிந்ததே — பாச
வினையகன்ற போதும்
 விமலனே நின்ருள்
தனையறியா மூடர்க்குத் தான்.

— முத்திநிச்சயம் 9

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல் முதலியார்

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 49 ★ இதழ் 5

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

சுக்கில – பங்குனி – 10—4—1990.

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடல்ஆல வாயிலாய்!
நின்தயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

அறநிலையங்களில் அரசின் குறுக்கீடு

தாய்நாட்டில் இந்துக்களுக்கு அநீதி :

இந்தியத் திருநாட்டில், இன்று, இந்து மதத்தினர் மூன்றும் தரக் குடிமக்களாக வாழவேண்டிய அவலம்நேர்ந்துள்ளது. இந்திய மண்ணின் மைந்தர்களாகிய இந்துப் பெருமக்கள், தம் பூர்வீகக் காஷ்மீர் மண்ணிலிருந்து சிறுபான்மை முஸ்லீம் தீவிரவாதிகளின் படுகொலைக்கும், அச்சுறுத்தலுக்கும் அஞ்சி, வேறுமாநிலங்களுக்குக் குடிபெயர்ந்து வருகின்றனர். வளங்கொழிக்கும் பஞ்சாப் மாநிலத்தில் நம் இந்துச் சகோதரர்கள் கூட்டங் கூட்டமாகச் சீக்கிய பயங்கர வாதிகளால் படுகொலை செய்யப்படுகிறார்கள். சீக்கியரின் பின்னால், இஸ்லாமிய மதச்சார்பு பாகிஸ்தான், இந்துக்களுக்கு எதிரானகிளர்ச்சிக்கு, உலைநெய்யத்துணை நிற்கிறது. இந்திய மத்திய, மாநில அரசுகள், இந்துக்களுக்குப் பாதுகாப்புத்தரும் ஆற்றல் இழந்து நிற்கின்றன. தெரிந்தும், தெரியாமலும், சமயச் சார்பின்மை என்ற போர்வையில், கால - காலமாக அரசும்,

அரசியல் வாதிகளும் இந்துக்களுக்கு இழைத்துவரும் அநீதி சொல்லும் தரமன்று. 1990 ஜனவரி இதழ் முதல், முறையாக, இந்துமத வளர்ச்சிக் குறைபாட்டுக்கு உரிய காரணங்களை ஆய்ந்து வெளிப்படுத்திவரும் ஞானசம்பந்தம், இவ்விதழில் முற்குறித்த வாறு, ஆட்சியாளர்களின், இந்துமதவளர்ச்சிக்கு எதிரான செயற் பாடுகளை இனங்கண்டு காட்டும் கடமையை மேற்கொள்கிறது.

இஸ்லாமியர், கிறித்தவர் ஆட்சிகள் :

வட இந்தியாவில், இஸ்லாமிய வேந்தர்களின் படை எடுப்பு களும், இந்துக்கோயில்களுக்கு ஏற்பட்ட பேரழிவுகளும், அடுத் தடுத்த நிறுவப்பட்ட இஸ்லாமியப் பேரரசுகளும், அவற்றால் இந்து மதமும், இந்தியக் கலாசாரமும் அடைந்த இழப்புக்களும், தென்னாட்டில் மதுரை வரை வந்து, இஸ்லாமியர் நிகழ்த்திய பேரழிவுகளும், இந்து மதத்தின் மேல் புலப்பட்டுத் தோன்றும் மாறாத வரலாற்று வடுக்களாகும். இன்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முன், இந்தியாவில் வணிகநிமித்தம் காலடி வைத்த கிழக்கிந்தியக் கம்பெனியார், மெல்ல மெல்ல, இந்திய நாட்டையே வசப்படுத்தி ஆங்கிலப் பேரரசை நிறுவி, ஏறத்தாழ 250 ஆண்டுகள் இந்திய நாட்டை ஆட்டிப்படைத்தனர். நேரடியாகவும், மறைமுகமாகவும் ஆங்கில ஏகாதிபத்தியத்தார், தங்கள் தாய்ச்சமயமாகிய கிறித்த வத்தை இந்தியாவில் வளரச்செய்து, இந்து மதத்தின் வீழ்ச்சிக்கு வஞ்சனையாக வழிகண்டனர். இந்துமதமும், கோயில்களும், அற நிலையங்களும் மறைமுகமாக ஆங்கிலேயர்களின் கட்டுப்பாட்டுள் முடக்கப்பட்டன. 250 ஆண்டுக்கால இந்துமதச் சீரழிவு தனியே விரிவாக ஆராயப்படவேண்டுவது

ஆங்கிலேயரின் நிர்வாகக் குறுக்கீடு :

இந்தியாவில், புதிய மத எழுச்சி இயக்கங்கள் (Mordern Religious Movements in India) என்ற பெயரில் கி. பி. 1929 இல், திரு. ஜே. என். ஃபருக்கர் (J. N. Farquhar) என்ற ஆங்கிலேயரால் எழுதி வெளியிடப்பட்ட நூல் ஒன்று, ஆங்கிலேயரின் இந்து மத வளர்ச்சிக்கு எதிரான செயற்பாடுகளையும், ஏறத்தாழ ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இந்து மதத்தினர் பெற்ற விழிப்புணர்வு களையும் விரிவாக விளக்குகின்றது. மூவேந்தர்கள், பாளையக்காரர் கள், ஜமீன்தார்கள் மற்றும் ஊர்ப்பெரியவர்கள், சமயநிறுவனங் கள், திருமடங்கள் முதலியவற்றின் பராமரிப்பில் விளங்கியஇந்துத் திருக்கோயில்களின் நிர்வாகத்தை, ஆங்கில அரசு பறித்து, தனது நேரடி நிர்வாகத்தில் கொண்டு வந்தது ஏறத்தாழ 30 ஆண்டு

களுக்குப்பிறகு மீண்டும் அவற்றை உரியவர்களிடமே ஒப்படைத்தது. இந்த நாடகத்துக்குப் பின்னே பல உண்மைகள் மறைக்கப்பட்டன.

ஒப்படைத்தமை ஏன்?

கி. பி 1862க்குள் இந்துக் கோயில்கள் பலவும் ஆங்கிலேய ஆட்சியின் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டன. இக்கோயில்களைப் பராமரிக்கவும், விழாக்கள் நடத்தவும், அலுவலர்களுக்கு ஊதியம் வழங்கவும் ஆங்கில அரசு பெரும் பொருள் செலவு செய்தது. அதற்குக் காரணம், தங்களால் ஆளப்படும் இந்துமக்களின் ஆழ்ந்த மத நம்பிக்கையை மதிப்பதாகக் காட்டிக் கொள்ளவும், ஆங்கில இராணுவத்தில் இடம் பெற்றிருந்த மேல் ஜாதி இந்துக்களின் நல்லெண்ணத்தைப் பெறவும் எடுக்கப்பட்ட முயற்சியே அது என்பதை மேற்குறித்த நூலே விளக்குகிறது. (பக். 8, 9,) விக்டோரியா மகாராணியார் காலத்தில் இவை மீண்டும் இந்துக்களிடமே ஒப்படைக்கப்பெற்றன. இந்து மதத்தில் தலையிடும் விருப்பமில்லை என்ற மகுடத்தோடு, ஆங்கிலேயர் கோயில் நிர்வாகங்களைத் திரும்ப ஒப்படைத்தாலும், அதன்பின் புலத்தில் கிறித்தவப் பாதிரியார்களின் வற்புறுத்தல் நிறைந்திருந்ததாக திரு ஏ. ஆர். முதலியார் அவர்கள் ஒருமுறை குறிப்பித்திருக்கிறார். காரணம், பராமரிப்புப் பொறுப்பேற்றால், இந்து மதத்தை முறையாக வளர்க்கும் கடமையை அரசு மேற்கொண்டாக வேண்டும். அது. கிறித்தவ வளர்ச்சிக்கு இடையூறாகும் என்பதே ஆங்கிலேய அரசு, மீண்டும் கோயில்களை ஒப்படைத்ததற்கான பின்புலமாகின்றது.

தமிழகத்தில் குறுக்கீடுகள் :

என்றாலும் ஆங்கில அரசு, தமிழ்நாட்டைப் பொறுத்தவரை கி. பி. 1924 இல் மீண்டும் இந்துத் திருக்கோயில்களை மறைமுகமாகக் கட்டுக்குள்கொண்டு வரும் முயற்சியாக இந்து அறநிலைய போர்டு என்ற அமைப்பை உருவாக்கியது. தொடக்கத்தில் இந்து மத அறநிலைய வருவாய்ப் பெருக்கத்திற்குத் துணைநின்ற அவ்வமைப்புப் பின்னர்த் திருக்கோயில் வளர்ச்சிக்கு இடையூறாயிற்று. பின்னர், அதுவே இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை என்ற பெயரில் அரசின் இலாகாக்களுள் ஒன்றாக உருவெடுத்தது. விடுதலைக்குப் பிறகு தமிழ்நாடு அரசும், ஆட்சியாளர்களும், இலாகாவும், கடைப்பித்து வரும் கொள்கைகளும், இயற்றிய சட்டங்களும், நிர்வாகக் குறுக்கீடுகளும் சமய நிறுவனங்களைச்

சீரழித்துச் செயலற்றனவாக ஆக்கிவிட்டன. இவை குறித்தும் விரிவாக ஆராய்ந்து வெளிப்படுத்த வேண்டிய செய்திகள் பல உள்ளன.

பல்வகை முறைகேடுகள் :

தமிழகத் திருக்கோயில்களைப் பொறுத்தவரை அவற்றின் வருவாய், அவற்றிற்குரிய நிலபுலன்களின் வழியே வருவது. மிகச் சில கோயில்களுக்கே, உண்டியல் மற்றும் கடை, கட்டிடவாடகை வழி வருவாய் உண்டு. பெரும்பாலான கோயில் நிலங்கள், அவ்வப் பகுதியில் வாழும் குடிமக்களிடமே குறைந்த குத்தகைக்கு விடப் பட்டுள்ளன. நில வருவாய், ஆட்சியாளர்களின் முறையற்ற சட்ட திட்டங்களால், ஏறத்தாழ, இல்லை என்கிற நிலையை இன்று எட்டி விட்டது. அரசின் குறுக்கீடுகளால் ஏற்பட்ட இழப்பினைப் பல்வேறு கோணங்களில் சுட்டலாம்.

1. கோயில்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய வாரத்தை 60, 40, 25 என அடுத்தடுத்துக் குறைத்தது.

2. வருவாய்த்துறை மூலம் நிலவரியை வசூலிக்கும் அரசு, கோயில் பங்கினை வசூலிக்க உதவாதது.

3. இத்தகைய பாக்கியை, நீதிமன்றம் வாயிலாகப் பெறும் உரிமையைத் தொடர்ந்து முடக்கி வருவது.

4. பல ஆண்டுக் குத்தகைப் பாக்கியை அரசு தன்னிச்சையாகத் தள்ளுபடி செய்து பேரிழப்பை உண்டாக்கியது.

5. சமயத்தில், ஊற்றமும், பக்தியும், பிடிப்பும் இல்லாத கட்சிக்காரர்களை அறங்காவலர்களாக நியமிப்பது.

6. முறையாகப் பராமரிக்கப்பட்டுவரும் தனியார், பரம்பரை அறங்காவலர், திருமடங்கள் நிர்வாகத்தில் உள்ள கோயில்களில் குறுக்கீடு செய்வது.

7. கோயில் வருவாயை, கோயில்களின் வளர்ச்சிக்கன்றி, வேறு துறைகளில் செலவிட வற்புறுத்துவது.

8. கோயில் நிலங்களைக் குத்தகைதாரர்கள் பினாமியாகப் பலரிடம் மாற்றிக் கொள்வதை மறைமுகமாக அங்கீகரிப்பது.

அரசின் நல்லெண்ண முயற்சிகள் :

நீண்ட இடைவெளிக்குப் பின் இரண்டாவது முறையாக ஆட்சிப் பெறுப்பேற்றுள்ள கலைஞர் திரு. மு. கருணாநிதி தலைமையிலான - தமிழக அரசு, மேற்குறித்தகுறைகளை நீக்கி, அறநிலையங்களின் வளர்ச்சிக்கு ஆக்கம் சேர்க்கும் என்பதற்குரிய அறிகுறிகள் தென்படுகின்றன. சிறந்த பக்தரும், திருக்கோயில்களின் வளர்ச்சியில் உண்மையான நாட்டமும் கொண்டவராகிய திரு. கே. பி. கந்தசாமி அவர்களை அறநிலையத்துறை அமைச்சராக நியமித்தது, தமிழக அரசு, உண்மையிலேயே அறநிலையங்களின் வளர்ச்சியில் நாட்டம் கொண்டுள்ளது என்பதை மெய்ப்பிப்பதாக அமைந்தது. இரண்டாவதாக, அறநிலையங்களுக்குக் கட்டுப்பாடற்ற தன்னாட்சி வழங்குவது பற்றி ஆராயஒருகுழுவை அமைத்ததைக் குறிக்கலாம். அக்குழு அளித்த அறிக்கை அரசின் பரிசீலனையில் இருந்து வருவதாகத் தெரிகிறது. தமிழக அரசு, நல்லெண்ண வெளிப்பாடாக, அவ்வறிக்கையை வெளியிட்டு, அரசின் நேரடிக் குறுக்கீடு இல்லாத - முறையான அறநிலையங்களின் வளர்ச்சிக்கு ஆக்கம் சேர்க்க வேண்டும் என ஞானசம்பந்தம் வேண்டுகோள் விடுகின்றது.

அறநிலையம் வாழ அரசு ஓங்கும் :

எல்லாவற்றிற்கும் மேற்பார்வையிடும் அமைப்பு ஒன்று இருந்தல் நல்லதே. 'நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடன்' என்றனர் நம் முன்னோர். மேற்பார்வை செய்தல், அன்றாட நிர்வாகத்தில் தேவையற்ற குறுக்கீடாக அமைதல் நன்மை பயவாது. கடந்த 25 ஆண்டுகளாகப் போதுமான மழை இல்லை; காவிரி நீர் வருகையும் குறைந்து போயிற்று. அறநிலையங்களின் வளர்ச்சி குன்றி வருவதற்கும், இயற்கையின் வளம் குன்றி வருவதற்கும் தொடர்பு உண்டு என்பர் முன்னோர். எதையும் அரசிடம் இருந்து அறநிலையங்கள் எதிர்பார்க்கவில்லை. அவற்றிற்கு உரிய வளங்களில் இருந்து, தடையின்றி வருவாய் வருவதை அரசு முடுக்கிவிடுமானால் அதுவே போதுமானது. தமிழக அரசு, நாடு செழிக்கவும், நல்லறம் ஓங்கவும், கோயில்கள் வாழ்ந்தாலே - கோலோச்சுவோரும் வாழ முடியும் என்ற உணர்வோடு - குறுக்கீடற்ற,சமயநம்பிக்கையுடையோர்எதிர்பார்க்கிற, மேலாண்மையோடு கூடிய ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என ஞானசம்பந்தம் வேண்டுகின்றது.

மேலாண்மை மிக்க அரசின் பார்வையில்
நூலாண்மை மிக்க அறம் செழித்தோங்குக !

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

ஆச்சாள்புரத்தில் நடைபெற்ற திருமுறை வேள்வி
மூன்றும் திருமுறை முற்றோதல் நிகழ்ச்சியின் நிறைவில்
வழங்கியருளிய

ஆசியுரை

2—4—1990

கல்லூரப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணம் சூடல ரேதொண்டர்
நல்லூர்ப் பெருமணம் மேயநம் பானே.

— திருஞானசம்பந்தர்.

ஆச்சார்யபுரம் :

சைவ சமய ஆசாரியராகிய ஞானசம்பந்தருக்கு முத்திப் பேறு அளித்த இடமாதலின் இத்தலம் ஆச்சாரியபுரம் எனப் பெற்றது. ஆச்சாரியபுரமதான் ஆச்சார்யாள்புரம் என்ருகி ஆச்சாள்புரம் ஆகியது எனத்தெரிகிறது. இதற்குமுன் இத்தலம் நல்லூர்ப் பெருமணம் என்றும், திருப்பெருமணம் என்றும் பெயர் பெற்றிருந்தது என்பது சேக்கிழார் திருவாக்கால் புலனுகிறது. ஞானசம்பந்தரும் "நல்லூர்ப்பெருமணம்" என்றே குறிப்பிடுகின்ருர். சம்பந்தருக்குத் திருமணம் நல்லூர்ப் பெருமணத்தில் நடந்ததும், அத்திருமணமே பெருமணமாக (முத்திப் பேருக) நிறைவெய்தியதும் திருவருட்பொருத்தமேயாம். மணம் - கலப்பு - ஈருயிர் ஒருயிராகக் கலத்தல். பெருமணம் - ஆருயிர் இறைவனுடன் கலத்தல்-அதாவது முத்திப்பேறு. ஞானசம்பந்தர் முத்திப்பேற்றுக்குரிய தலத்திலேயே முத்திப்பேறெய்திஞர்என்பது திருவருட் சிறப்பாகும்.

அறிவாகாயம் :

ஓம் என்ற பிரணவத்தை முதலில் சொல்லிய பிறகே வேதம் ஓதவேண்டும். அதுபோல் தமிழ் வேதமாகிய திருமுறைகளைப் பிரணவ வடிவாயுள்ள "திருச்சிற்றம்பலம்" என்ற சொற்ருெடரைச் சொல்லியே தொடங்கவேண்டும் என்பது மரபு. "சித்பர

வியோமமாகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று, பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி" என்பது சேக்கிழார் திருவாக்கு. சித்பரவியோமம் என்பது அறிவாகாயம் எனப்படும். அதுவே பிரணவவடிவம், அதுவே திருச்சிற்றம்பலமுமாம்.

அமைப்பும் அழகும் :

மூன்றாந் திருமுறையில் 84 திருத்தலங்கள் 121 திருப்பதிகங்களால் போற்றப் பெறுகின்றன. பொதுப்பதிகங்கள் நான்கினைச் சேர்த்து 125 திருப்பதிகங்கள் இதில் உள்ளன. காந்தாரபஞ்சமத்தில் 23 பதிகங்களும், கொல்லிப்பண்ணில் 18 திருப்பதிகங்களும், கொல்லிக் கௌவாணத்தில் ஒருபதிகமும், கௌசிகத்தில் 13ம், பஞ்சமத்தில் 11ம், சாதாரியில் 33ம், பழம் பஞ்சுரத்தில் 17ம், புறநீர்மையில் 6ம், அந்தாளிக் குறிஞ்சியில் 2ம், ஆக ஒன்பது பண்களும், 125 பதிகங்களும் உள்ளன.

மூல இலக்கியம் :

திருஞானசம்பந்தர் இசைத் தமிழில் இயற்றமிழைக்குழைத்து வளம் பெறும் வகையில் அரியபல விகற்பச் செய்யுள்களை அருளிச் செய்துள்ளார். அவை அவரது திருப்பதிகங்களில் மொழி மாற்று, மாலை மாற்று, வழிமொழி மடக்கு, இயமகம், ஏகபாதம், இருக்குக் குறள், எழுகூற்றிருக்கை, ஈரடி, ஈரடி மேல் வைப்பு, நாலடி மேல் வைப்பு முடுகியலாகிய திருவிராகம், சக்கரமாற்று முதலிய பெயர்களில் உள்ளன. விகற்பச் செய்யுட்களுக்கு இலக்கணம் காண்போர்க்கு இவையே மூல இலக்கியமாகத் திகழ்வது என்பதைச் சேக்கிழார் இருபாடல்களால் விளக்கியுள்ளமை அறிந்து இன்புறத்தக்கது. மூன்று திருமுறையில், இவ்யாப்புவகைத் திருப்பதிகங்கள் பல இடம் பெற்று, சீகாழிப் பெருமானைப் பற்றியனவாகவே அமைந்துள்ளன.

சிற்றம்பலம்நாடி :

இத்திருமுறையில் கடைசியில் பாடிய இரு பதிகங்களும் ஆச்சாரியபுரத்தில் பாடப்பெற்றவையாதலின் மூன்றாந் திருமுறை வேள்வி இத்தலத்தில் நிகழ்தல் சிறப்புடைத்தாகும். சந்தான பரம்பரையில் காழிக்கங்கை மெய்கண்டாரை அடுத்து வந்த ஆசாரியர் காழிச்சிற்றம்பலநாடிகளாவார். இவரைச்சித்தர்களோடு சிற்றம்பலநாடிகள் என்றும் வழங்குவர். இவர் குருமூர்த்த ஆலயம் சித்தர்க்காட்டில் இருப்பதனால். இப்பெயர் புதுமையாகத் தோன்றும். இப்பெயர் கூத்தப் பிரானுக்கே உரிய பெயர்என்பதை இத்திருமுறை நமக்குஉணர்த்துகிறது. காந்தாரபஞ்சமப்பண்ணில் தொடங்கும் முதற்பதிகம் "ஆடினாய் நறுநெய்யொடு பால் தயிர்" என்பது அதில் 'சிற்றம்பலம் நாடினாய் இடமா" என்று வருகிறது.

சிற்பரவியோமமாகும் திருச்சிற்றம்பலத்தை கூத்தப்பிரான் எப்போதும் நாடிநிற்கிறுன் என்பது புலனுகிறது எனவே இறைவன் சிற்றம்பலம்நாடியாய் இருக்கிறுன் என்பதும், அவன் வழி வரும் ஆசாரியர் ஒருவரும் சிற்றம்பலம்நாடியாய் அப்பெயர் தரித்துள்ளார் என்பதும் இத்திருமுறையால் தெளிவாகிறது. மேலும் இப் பதிகத்தில் "அந்தணர் பிரியாத சிற்றம்பலம்" நல்லவர் பிரியாத சிற்றம்பலம் "சீலத்தார் தொழுதேத்து சிற்றம்பலம். கற்றவர் தொழுதேத்து சிற்றம்பலம்" என்று தில்லைவாழந்தணர்களைச் சிற்றம்பலம் பிரியாதவர்களாகக் காட்டுகிறுர் ஞானசம்பந்தர்.

அஞ்செழுத்துப் பதிகம் :

ஞானசம்பந்தருக்கு உபநயன காலத்தில் வேதம்ஓதும் உரிமை தந்தோம் என்ற அந்தணர்கட்கு, வேதத்தில் முக்கியமாயுள்ள அஞ்செழுத்தின் சிறப்பை ஞானசம்பந்தர் அந்தணர்கட்கு எடுத்தோதினுர். அத்திருப்பதிகம் "துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்" என்பது. சோதியில் கலக்கும்போது நிறைவாக ஓதிய திருப்பதிகம், நமச்சிவாயத் திருப்பதிகமாகிய "காதலாகிக் கசிந்து" என்பதாகும். இதில்வேதம் நான்கினும் மெய்ப்பொருள் நாதன், நாமம் நமச்சிவாயவே" என்று ஓதிநிறைவு செய்கின்றுர்.

தேவாரம் அருளிய மூவருமே தூலபஞ்சாக்கரமாகிய நமச்சிவாயத் திருப்பதிகம் ஒவ்வொன்றருளியுள்ளனர். ஞானசம்பந்தர் தூல, சூக்கும, அதிசூக்கும பஞ்சாக்கரங்களை உள்ளடக்கித் தொகுப்பாக அஞ்செழுத்தின் பெருமையை உணர்த்த "துஞ்சலும் துஞ்சல்" என்ற பதிகம் அருளியுள்ளார். முதலில் ஓதிய இத்திருப்பதிகத்திலும், இறுதியில் 'ஓதியகாதலாகி என்னும் பதிகத்திலும் முதல் பாடல்களில் ஓதும் முறையை அறிவித்துள்ளார் "நெஞ்சகம் நைந்து நினைமின்" நினைத்தால் வாழ்வில் வரும் கூற்றம் முதலிய இடர்களை அகற்றலாம் என்கிறது முதல்பதிகம். அதையே "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்தமை நன்னெறிக்கு உய்ப்பது" என்று சொல்கிறது. அவரவர் தகுதிக்கேற்ப தூலசூக்கும பஞ்சாக்கரத்தை எல்லோரும் ஓதி உய்யலாம் என்கிறது இவ்விருபதிகங்களும்.

ஆணைநமதே :

சைவநெறியேமெய்ந்நெறியென்று நிலைநாட்டியதிருப்பாசுரம் எனப்படும் "வாழ்க அந்தணர்" என்னும் திருப்பதிகம், இத்திருமுறையில் இடம் பெற்றுள்ளது. மேலும் இத்திருமுறையிலும் இரண்டிடங்களில் ஆணைநமதே என்று குறிப்பிடுகின்றுர். ஒன்று திருவெண்காட்டுப் பதிகமாகிய "மந்திரம் மறையவை" என்பதாகும். அப்பதிகத்தின் இறுதிப்பாடலில் "அல்லலோடருவினை

அறுதல் ஆணையே" என்று அறுதியிட்டுக் கூறுதல் காணலாம். இரண்டாவதாகக் குறிப்பிட்டுள்ள தலம், திருவேதிகுடியாகும். 'நீறுவரியாடரவோடு' என்ற பதிகத்தின் இறுதிப்பாடலில் "வேதிகுடி ஆதிகழலே, சிந்தை செயவல்லவர்கள், நல்லவர்கள் என்ன நிகழ்வெய்தி இமையோர், அந்த உலகெய்தி அரசாளு மதுவே சரதம் ஆணைநமதே" என்பது அப்பாடற் பகுதியாகும். மேலும் இத்திருப்பதிகத்தை ஆசாரத்துடன் முறையாக ஓதினால் திருமணம் தடைப்படாமல் நிறைவேறும். இக்குறிப்புள்ள பாடல் பகுதி வருமாறு :

"கன்னியரொடாடவர்கள் மாமணம் விரும்பி அருமங்கலம்மிக
மின்னியலும் நுண்ணிடைநன் மங்கையர் இயற்றுபதி
வேதிகுடியே"

என்பது அப்பகுதி.

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்ற மங்கலத் திருப்பதிகத்தில் இரண்டாம் பாடலில் தமக்கு அம்மையப்பர் ஞானப்பால் கொடுத்தாண்டமையை அகச்சான்றாகக் காட்டிப் பாடியுள்ளமை அறிந்து இன்புறத்தக்கது "போதையார் பொற் கிண்ணத்து அடிசில் பொல்லாதெனத் தாதையார் முனிவுறத் தானெனையாண்டவன்" என்பது அப்பாடற்பகுதி.

தவநெறி சித்திப்பதற்கு 'இயலிசை எனும்பொருளின்திறமாம்' என்ற திருப்பதிகம் ஓதியும், பொருள் சித்திப்பதற்கு "இடரினும் தளரினும்" என்னும் திருப்பதிகத்தையும் ஓதிப் பயன்பெறலாம். பயனடைந்தோர் பலராவர்.

அச்சக் குறிப்பு :

திருவாரூர்த் தலத்திற்குச் செல்லும் போது தேவார மூவரும் தம்மையும் ஆரூர் இறைவன் ஆள்வரோ ஏற்பரோ என்ற அச்சத்துடன் அணுகினர் என்ற குறிப்பு மூவர் பாடல்களிலும் காணக் கிடக்கின்றன. "தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியம், நமக்கும் உண்டு கொலோ" என்கிறார் அப்பர். "இறைவன் இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர்" என்பது சுந்தரர் வாக்கு.

'அந்தமாய் உலகாதியும் ஆயினான்' என்று தொடங்கும் பதிகத்தில் "எந்தைதான் எனை என்றுகொளும் கொலோ" என்கிறார் சம்பந்தர். எனவே அச்சக் குறிப்பு மூவர் பாடலிலும் காண்கிறோம்.

வரலாற்றுக் குறிப்பு :

சோழ மன்னன் காவிரியில் நீராடும் போது முத்தாரம் காவிரியில் நழுவிப்போக இறைவனுக்கு ஆகட்டும் என்றான். அந்து அவ்வாறே மறுநாள் சுவாமிக்குத் திருமஞ்சனம் எடுக்கும் குடத்தில் புகுந்து இறைவனுக்கு அபிஷேகம் செய்யும் போது இறைவன் திருவுருவில் அணியாயிற்று என்பது வரலாறு. இதனைச் சுந்தரர்,

"தாரமாகிய பொன்னித் தண்துறையாடிவிழுத்தும்
நீரின் நின்றடி போற்றி நின்மலாக் கொள்ளென ஆங்கே
ஆரங்கொண்ட எம்மானைக்காவுடை ஆதியை"

என்று குறிப்பிடுகிறார்.

இதனையே ஞானசம்பந்தரும் இத்திருமுறையில் "வானைக் காவில் வெண்மதி" என்ற பதிகத்தின் 7 ஆம் திருப்பாடலில், "ஆரம்நீரோடேந்திஞன் ஆனைக்காவு சேர்மினே" என்றருளிச் செய்துள்ளார்.

கல்லூர்ப் பெருமணம் வேண்டா :

அம்மி மிதித்து அருந்ததி காட்டும் திருமணம் வேண்டா, ஏனெனில் கழுமலம்முதலாகப் பல்லூர்களிலும் நான்பாடியபாடல்கள் மெய்யாகமாட்டா, நான் இதுவரை சொல்லிய பாடல் கருத்துக்களைத் தொண்டர்கள் ஏற்க மாட்டார்கள். நல்லூர்ப் பெருமணத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானே, இவ்வேண்டுகோளை ஏற்று எனக்குப் பெருமணத்தைக் கொடுத்தருள (முத்தி) என்பது "கல்லூர்ப் பெருமணம்" என்ற பாடலின் கருத்தாம்.

"அவ்வினைக் கிவ்வினை" என்ற திருநீலகண்டத் திருப்பதிகத்துள் 3 ஆம் பாடலில் "முலைத்தடம் மூழ்கிய போகங்களும் மற்றெவையும் எல்லாம், விலைத்தலையாவண்ணம் கொண்டு எமையாண்ட விரிசடையீர்" என்ற சொல்மலருக்கு இத்திருமணம் மாறுபாடாக அமைகிறது. எனவே தொண்டர்கள் என் சொல்லை மெய்யாகக் கொள்ளார்கள். எனவே "கல்லூர்ப் பெருமணம் வேண்டா" மேலும் எனக்கு இவ்வுலக போகங்களில் விருப்பமும் இயல்பாகவே இல்லை. எனவே என்னை இணையார் திருவடியில் ஏற்றருள்க என்றார்.

இப்பதிக இறுதிப் பாடலில் இப்பதிகத்தை ஓதுவார்க்கு "அறும் பழி, பாவம், அவலம் இலரே" என்றதனுல் இதனை வலியுறுத்தினர். அவலம் இலர் எனவே பிறவித் துன்பம் இலராவர், வீடு பெறுவர் என்ற குறிப்பும் காணப்படுகிறது எனவே ஞானசம்பந்தர் திருமணம் வேண்டாம், பெருமணம் வேண்டும் என்று வேண்டிப் பெற்ருர் ஆயிற்று.

வாழ்த்து :

இன்று திருமுறை முற்றோதலில் பங்குகொண்டுள்ள உள்ளூர் வெளியூர் அன்பர்களும், அடியார்கட்கு மாகேஸ்வர பூசை செய்து மாண்புற்ற சைவ வேளாளர் சங்கத்தின் மெய்யன்பர்களும், செவிமடுத்து இன்புற்றுள்ள தொண்டர்களும், எல்லா நலன்களும் பெற்று நீடுஇனிதுவாழ ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்ருேம்.

திருமுறை ஓதிக் கருமுறை தகர்ப்போம்.

நம்மைப் பேணும் அம்மை

வித்துவான் திரு. சி. குமரேச பிள்ளை
சுசீந்திரம்.

"தாயுமிலி தந்தையிலி தான் தனியன் காணேடீ" என்று மணிவாசகர் திருவாசகத்தில் சிவபெருமானைக் குறிப்பிடுகின்றார். சிவபெருமான் ஆதிக்கெலாம் ஆதி; அநாதி; தனக்கோர் காரணமும் முதலும் இல்லாத் தனிப்பரம்பொருள்; அனைத்துயிர்களையும் ஒன்றாகியும் உடனாகியும், வேறாகியும் நின்று ஊட்டி அளிக்கும் தாயானவன்! இருப்பினும், தனக்கோர் தாயும் தந்தையுமிலாதவன் என்ற நிறையைக் குறையாக்கிப் பேசுகின்றார் மாணிக்கவாசகர். அக்குறையைப் போக்கிக் கொள்ளவோ மணிவாசகருக்குப் பதில் கொடுக்கவோ ஒரு அம்மையையும் அப்பனையும் தேடிக்கொண்டார் சிவபெருமான்.

அப்பெருமான் 'திண்ணனைக் கண்ணப்ப' என்றழைத்து அன்புத் தந்தையாக்கிக் கொண்டார். புனிதவதியாரை 'நம்மைப் பேணும் அம்மை' எனக்குறிப்பிட்டுத் தாயாக்கிக் கொண்டார்.

தம்மை அம்மை எனப் போற்றும் அளவிற்குப் புனிதவதியார் சிவபெருமானைப் பேணிய திறம் தான் என்ன?

வாணிகம் செய்து வந்த வணிகர் சிறந்து வாழ்ந்து வந்த இடங்களுள் வங்கக்கடற்கரைப் பட்டினமாகிய காரைக்காலும் ஒன்று. அங்கு வாழ்ந்த வணிகர் குலத்தலைவர் தனதத்தர். அவர் செய்த தவத்தின் பயனாகச் சிவபெருமான் அருளால் அவர் மனைவி ஒரு பெண்மகவைப் பெற்றெடுத்தாள். குழந்தையின் திருப்பொலியும் அழகினைக் கண்ட ஊரார் திருமகள் அவதாரமோ என ஐயுற்றனர். குழந்தையின் இயல்புக்கேற்பப் புனிதவதியார் எனத் திருநாமம் சூட்டினர் தனதத்தர்.

'தோன்றில் புகழொடு தோன்றுக' என்பார் வள்ளுவர். மக்களாகப் பிறந்தால் புகழுக்கேதுவாகிய குணங்களோடு பிறக்க வேண்டுமென்று கூறுகின்றார். பிறக்குமுன்னே புகழுக்கேதுவாகிய குணங்களைப் பெறுவதெங்கே? முன் பிறவியிலே அக்குணங்களைப் பழகி வந்திருத்தல் வேண்டும். அதனை வள்ளுவர் 'தோன்றில் புகழொடு தோன்றுக' என்றார். இதற்கு உரையாகப் பரிமேலழகரும்

மக்களாகப் பிறந்தால் புகழுக்கு ஏதுவாகிய குணங்களோடு பிறக்க என்றார். 'அம்மையார்' இப்பிறவியிலே சிவபெருமானால் 'நம்மைப் பேணும் அம்மை' என்று புகழப் படுவதற்கேதுவாகிய குணங்களை முற்பிறவிகளிலே பழகி வந்திருந்தார் என்பதைச் சேக்கிழார் பெருமான், 'பணி அணிவார் கழற்கடிமை பழகிவரும் பாங்குபெறத் தணிவில் பெருமனக்காதல் ததும்ப வரும் மொழி பயின்றார்' எனக் குறிப்பிடுகின்றார். முற்பிறவிகளிலே சிவபெருமானுக்குத் தொண்டு செய்து வந்த பெருமையைப் பிறப்புரிமையாகக் கொண்டு பிறந்த அம்மையார், தளர்நடைபருவத்தே பேசியகுழலினினிய யாழினினிய மழலை மொழிகள் முற்பிறவிகளில் சிவபெருமானிடம் பழகி வந்த அன்பு மொழிகளாகவே வெளிவந்தன. இதனை அம்மையாரே தம் அற்புதத் திருவந்தாதியில்,

"பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்"

எனப் பாடுகின்றார்.

குழந்தை புனிதவதி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளருகின்றார். உடல் மட்டுமா வளர்கிறது? உணர்வும் வளர்கிறதாம். என்ன உணர்வு? பிறப்புரிமையால் வந்த சிவ உணர்வு. முன் பிறவிகளில் அடங்கியிருந்த சிவ அன்புடன் அழகும் கொழுந்து விட்டு வளர்கிறது. 'விடையவர்பால் அல்கிய அன்புடன் அழகின் கொழுந்து வளர்வதென வளர்வார்' எனப்பெரியபுராணம் பேசுகின்றது. பேதும்பைப் பருவத்தை அடைந்த புனிதவதி பல வகை விளையாட்டுக்களைப் பான்மையுடன் ஆடுகின்றாள்.

"வண்டல் பயில்வன வெல்லாம் வளர்மதியும் புனைந்தசடை
அண்டர் பிரான் திருவார்த்தை அணைய வருவன பயின்று"

எனப் பேசுகின்றது பெரியபுராணம்.

விளையாட்டில் வரும் சொற்களும் சிவபெருமானைப் போற்றுவதாகவே வருகின்றன.

சிவனடியார்களைச் சிவம் எனவே எண்ணும் உயரியல்பும் அம்மையாரிடம் அப்பருவத்திலேயே அமைந்திருந்தது. தொண்டர்வரின் தொழுது போற்றினார்.

மங்கைப் பருவம் அடைந்தார் அம்மையார். பெற்றோர் நாகைப்பட்டினத்து வணிகர் நிதிபதி மகன் பரமதத்தனுக்கு மணம் பேசினர்.

" தளிரடிமென் நகைமயிலைத் தாதவிழ்தார்க் காளைக்குக்
களிமகிழ் சுற்றம் போற்றக் கலியாணம் செய்தார்கள் "

மயில்-காளை பொருந்தாத இனம்; எனினும் திருமணம் நிகழ்ந்தது; கற்பு நெறிப்படி பொருந்தி வாழ்கின்றனர். காரைக்கால் பதியிலே இல்லறம் நடத்தி வருகின்றனர்.

" ஆங்கவன் தன் இல்வாழ்க்கை அருந்துணையாய் அமர்கின்ற
பூங்குழலார் அவர்தாமும் பொருவிடையார் திருவடிக்கீழ்
ஓங்கிய அன்புறுகாதல் ஒழிவின்றி மிகப்பெருக
பாங்கில்வரு மனையறத்தின் பண்புவழாமையில் பயில்வார் "

எனச் சேக்கிழார் அம்மையாரின் வாழ்க்கைத் துணை நலத்தைத் தெரிவிக்கின்றார்.

புரமதத்தனோடு இல்வாழ்க்கைக்கு அருந்துணையாய் அமர்ந்த அம்மையார், கணவன் மனமகிழ, பூவணிந்து தன்னை அழகுசெய்து வாழ்கின்றார். இல்லறதருமப்படி மனைத்தக்க மாண்புடையவளாகித் தற்கொண்டான் வளத்தக்க வாழ்க்கை நடத்தி, மனைமாட்சி பொருந்த, கற்பு என்னும் திண்மையுண்டாகத் தற்காத்து, தற்கொண்டான் பேணி, தகைசான்ற சொற்காத்து, இல்லறப் பண்பிலிருந்து வழுவாது வாழ்க்கை நடத்துகின்றார் அம்மையார். எனினும் சிவ அன்பு குறையவில்லை. அம்மையார் முற்பிறவிகளிலே பழகி வந்த அல்கிய சிவ அன்பு குழந்தைப் பருவத்தே கொழுந்து விட்டு வளர்ந்து, தளர்நடைப் பருவத்தே தனிவில் பெருங்காதல் ததும்ப மழலைப் பேச்சோடு தளிர்விட்டு, விளையாடும் பருவத்தே அன்புச் செடியாய் வளர்ந்துமலர்ந்தது. இப்போது அம்மலரிலிருந்து சிவபெருமான் திருவடியில் கொண்ட சிறந்த அன்புடன் கூடிய காதல் தேன் இடைவிடாது சொரிகின்றது. இந்நிலையிலும் இல்லற தருமத்தினின்றும் வழுவாமல் கணவனுடன் பொருந்தி வாழ்க்கை நடத்துகின்றார்.

என்னே அம்மையார் வாழ்க்கையின் அற்புதம்! உள்ளத்தைச் சிவபெருமான் திருவடிகளில் பதித்து அவன் வழிநின்று உலகியல் கருமங்களைச்செய்துவருவதே திருத்தொண்டர்களின் திருவாழ்க்கை. அம்மையார் அவ்வாழ்க்கை நெறியினின்று வழுவாது வாழ்க்கை நடத்துகின்றார். இளமையில் தொண்டர் வந்தால் தொழுது வந்த அம்மையாரது அடியார் பக்தியும் இல்லறத்திலே,

" நம்பர் அடியார் அணைந்தால் நல்ல திரு அமுதளித்தும்,
செம் பொன்னும் நலமணியும் செழுந்துகிலும் முதலான
தம்பரிவினால் அவர்க்குத் தகுதியின் வேண்டுவ கொடுத்தும்,
உம்பர்பிரான் திருவடிக்கீழ் உணர்வுமிக ஒழுகும் நாள் "

எனும் அளவிற்குச் சிறந்தது. (தொடரும்)

மணிக்கடலில் முகந்த சில முத்துக்கள்

வித்துவான் திருமதி. ப. நீலா, எம். ஏ., எம். ஃபில்.,
தருமபுரம்.

(மலர் 49, இதழ் 4, பக்கம் 189 இன் தொடர்ச்சி)

கறவை காணும் கன்று :

அன்பென்னும் உணர்வு இருபக்கத்திலும் தோன்றும்போது தான் சிறப்பாக இருக்கும். காவடிக்கு இருபக்கச்சுமையும் சமமாக இருந்தால்தானே இனிமையாகும். கா போல இருதலையானும் இனிது. (குறள்) தாய்க்கும் பிள்ளைக்கும் உள்ள பாசமும் அப்படித் தான். என்றாலும் இங்கே தாய்க்குப் பல்வேறு உணர்வுகளால் ஏற்றத்தாழ்வு தோன்றவாய்ப்புண்டு. ஆனால்கன்றுக்குத் தாயைத் தவிர புகலிடமில்லை. இதனால்தான் போலும் அன்பு செலுத்தும் நிலையில் தாய் என்றும், பெறும்நிலையில் கன்று என்றும் இலக்கிய உவமைகள் அமைகின்றன.

முனிவன் ஒருவனிடம் வரங்கேட்க விழையும் சுநந்தை சிந்தா மணியில் கன்றாக உவமிக்கப்படுகிறாள்.

கறவை காண் கன்றின் வெஃகிக் கண்டடி பணிந்துநின்ற வகையைத் தேவர் காட்டுகிறார். (சிந். 1125)

கம்பர் கைகேயி அழைப்பை ஏற்றுவந்த இராமனுக்குக் கன்றை உவமை காட்டினார். சிந்தாமணியை அடியொற்றி இங்கேயும் அன்பு பெறுபவனே கன்றாக அமைகிறான். தாயின் அன்புநிலை மாற்றம் நாமறிந்ததே.

அந்திவந் தடைந்த தாயைக் கண்ட ஆன்கன்றினனைான்
(கம். 1598)

நதிகள் தேடும் கடல் :

மலையில் தோற்றம் கொள்ளும் நதிகளெல்லாம் முடிவில் கடலையே சென்றடைகின்றன. எல்லாப் பொருட்களும் இறைவன் நூலுள் தங்குகின்றன என்பது இவ்வுவமையால் சிந்தாமணியில் விளங்குகிறது.

ஆறெலாங் கடலுள் வைகும் அருந்தவத் திறைவன் நூலுள். (சிந். 1127) கம்பர் இவ்வுவமையை இரண்டு இடங்களில் வைத்து அழகுசெய்கிறார். நீதியென்ற ஆறுகள் மண்டும் கடலாக பரதன் இருக்கிறான் என்பது முதல் இடம்.

தன்வரிய பெருநீதித் தனியாறு புகமண்டும்
பள்ளமெனும் தகையான். (கம். 657)

விசுவாமித்திரனுடன் வேள்வி காக்க இராமன் புறப்பட்ட பொழுதில், தசரதனிடம் வசிட்டன் அளவில் கலைகளும் உன் மகனிடம் புகும்காலம் இது என்றான்.

பெய்யும் மாரியால் பெருகு வெள்ளம் போய்
மொய்கொள் வேலைவாய் முடுகும் ஆறுபோல். (கம்.329)

என்ற உவமை ஆறுகள் கடலில் சென்று நிறைவு பெறுவதுபோல, கலைகளெல்லாம் இராமனை வந்தடையப் போகின்றன என்பதை விளக்கியது.

குட்டியும் புலியும் :

இளமைப் பருவம் எல்லா உயிரின வகையிலும் கவர்ச்சியுடையது. பொதுவாக மனிதர்கள் விலங்கினங்களின் குட்டிகளிடம் ஆசைகொண்டு அவற்றைப் பற்றித் தம்பால் வைத்துக் கொள்ள விரும்புவதுண்டு. தாய்ப்புலி பக்கமிருக்கும் போது புலிக் குட்டியைக் கவரும் எண்ணங்கூட எழாது என்ற விபரம் சிந்தாமணியில் வருகிறது.

சீவகனுக்குக் கட்டியங்காரனால் வந்த துன்பத்தைக் கேட்ட நண்பன் பதுமுகன் ஏளனத்தால்சிரித்துப் புலிபுறமிருக்கும்போதுக் குட்டியைத் தின்னமுடியுமா! என்று வினவினான். தான் சீவகனைக் காவல் செய்வதை இதனால் தெரிவித்தான்.

குட்டியைத் தின்னலாமே கோட்புலி புறத்ததாக (சிந். 1134.)

கம்பர் இந்தஉவமையை சூர்ப்பணகை வாயிலாக எடுத்தாள்கிறார். அவள் மானபங்கப் படுத்தப் பட்டபோது தன் உறவினர்களைக் கூவியழைக்கிறாள். அவர்கள் அருகிலிருக்கும் போது தனக்குத் தீமை வராது என்று எண்ணியது தப்பாகப் போயிற்று. புலிபக்கமிருக்கக் குட்டி யாராலும் கவரப்படாது என்ற உலகஉரை பொய்யாயிற்று என்கிறாள்.

புலிதானே புறத்தாக குட்டிகோட்படாது என்ன
ஒலியாழி உலகுரைக்கும் உரை பொய்யோ. (கம். 2833.)

பழிக்கு நாணும் பாவை :

சீவகனைச் சிறைவைத்த கட்டியங்காரன் செயலால் கோபமடைகிற காந்தர்வதத்தை தேவர்களால் அவனைச் சிறைமீட்க எண்ணுகிறாள். தன்னால் அவனைச் சிறைமீட்க முடியுமென்றாலும் உலகம் சீவகனின் ஆற்றலை இகழ்ந்தல்லவோ பேசும் - அவன் பழி பெற இதனைச் செய்யலாமா என்று நாணுகின்றாள் அவள்.

தன்னையெய் திச்சிறை மீட்டனள் தன்மனை யாளெனின்
என்னையாவது இவனுற்ற லுங் கல்வியு மென்றுடன்
கொன்னும் வையங் கொழிக்கும் பழிக்கென்
செய்கோ தெய்வமே (சிந் 1149)

எனக் கவன்றாள். கம்பர் சிறையிருந்த சீதையின் மனநிலையையும் இதே அமைப்பில் காட்டுகிறார். அனுமனிடம் இலங்கையைமட்டு மின்றி இவ்வுலகங்கள் யாவையும் என் சொல்லினாலேயே சுடுவேன் ஆனால் தூயவன்வில்லுக்கு அது இழுக்காகிவிடும் என்று அஞ்சுகிறேன் என்றாள்.

அல்லல் நீத்த இலங்கைய தாகுமோ
எல்லைநீத்த இவ்வுலகங்கள் யாவும் என்
சொல்லினால் சுடுவேன் அது தூயவன்
வில்லின் ஆற்றற்கு மாசென்று வீசினேன். (கம். 5362)

பகை புகழும் வாழ்வு :

சீவகனைக் கொணர்க என்று கட்டியங்காரனால் ஏவப்பட்டவர்கள், வெறுங்கையுடன் திரும்பாமல், யாரையோ கொன்று வாளால் உருத்தெரியாதபடிக் குலைத்து; இவனே சீவகன் - தப்பியோட முயன்றபோது கொன்று விட்டோம் என்றனர். கட்டியங்காரன் மகிழ்வின் எல்லைக்கே போய்விட்டான். யாராலும் வெல்ல முடியாத சீவகனைக் கொன்ற நீவிர் பெருஞ்சிறப்புப் பெறுக-என்று வாழ்த்தினன்.

அருள்வலி யாண்மை கல்வி யழகறி விளமை யூக்கம்
திருமலி யீகை போகந் திண்புகழ் நண்பு சுற்றம
ஒருவரிவ் வுலகில் யாரே சீவகனுக்கு நேரார்
பெரிதரிதிவனைக் கொன்றாய் பெறுகெனச் சிறப்புச் செய்தான்.
(சிந். 1165.)

கம்பர் இராவணன் இராமனைப் புகழுமிடத்தைக் காட்டுகிறார். இராமனைப் பகையாகப் பெற்ற உவகையை இராவணன் வெளியிடுகிறான். சீதையைக் காமத்தால் கவர்ந்த இராவணனுக்குத் தன் ஆற்றல் மேலும் வடிவின் மேலும் ஒருகம்பீர உணர்வு இருந்திருக்கும். இராமனைப்பார்த்தபின் அது இருந்தஇடம் தெரியாமல் மறைந்துவிட்டது.

இராமன் அழகுக்குத் தான் இணையாக முடியாதென்பதை
நாய் எனத்தகுதும் அன்றே காமனும் நாமும் எல்லாம் -
(கம். 7301.)

வீரத்திலும் அவனை நெருங்கமுடியாது. பலபடச் சொல்வானேன், என்னைத்தீராத், தற்பதத்தைத் (செருக்கு) துடைத்தது என்றால் பிறிதொரு சான்றுமுண்டோ என வியந்தான். (கம். 7298.) பகைபுகழக் கிடத்தல் பெறற்கரிய வாய்ப்புத்தான் என்பதை நாமும் ஒப்புகிறோம்.

(வளரும்)

இன்றைய வாழ்விற்குக் — — கம்பராமாயணம்

டாக்டர் திரு. ச. முத்துக்குமரன்
துணைவேந்தர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.

(மலர் 49, இதழ் 4, பக்கம் 181 இன் தொடர்ச்சி)

அரசு பற்றிய விளக்கம் :

எங்கே நாட்டை ஆளும் மன்னன் நல்லவனாக விளங்குகிறானோ அங்கே நாட்டு மக்கள் மகிழ்ச்சியாக வாழ்வர்; வளமும், நலமும் பொருந்திய குறிக்கோளுடன் வாழ்வர். எங்கே நாடாள்வோன் அறிவிழந்து கொடுஞ்செயல் புரிகிறானோ அங்கே மக்கள் மகிழ்ச்சி இழந்து இன்னல்களை அனுபவிப்பர். கம்பர் இவ்விருவகைப்பட்ட அரசாட்சிகளையும் விளக்குகிறார். இராம இலக்குவர்கள் வனவாசத்தில் இருக்கும் போது சீதை இராவணனால் கவர்ந்து செல்லப்பட்ட பின் இராமனும் இலக்குவனும் சீதையைத் தேடிச் செல்கின்றனர். அவ்வாறு அவர்கள் தேடிச் செல்லும்போது கவந்தன் வாழும் காட்டுப் பகுதியை அடைகின்றனர். அவர்கள் அந்த நாட்டை அடையும்போது அப்பகுதி கவந்தன் என்ற அரக்கனின் ஆட்சியால் அல்லலுற்றுக் கொண்டிருப்பதைப் பார்க்கின்றனர். அந்நாட்டின் தோற்றமே அதனை ஆளும் அரசன் எத்தகு கொடுங்கோலன் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

மரபுளி நிறுத்திலன், புரக்கும் மாண்பிலன்,
உரன் இலன் ஒருவன் நாட்டு உயிர்கள் போல்வன;
வெருவுவ, சிந்துவ, குவிவ விம்மலோடு
இரிவன, மயங்குவ, இயல்பு நோக்கினர்.

— ஆரண்ய காண்டம், கவந்தன் படலம், பாடல்-3.

மக்கள் முறைப்படத் தம் வாழ்வு நடத்தும் வகையில் அவர்களைக் காக்கும் திறனற்று ஒருமன்னன் வாளா இருப்பானேயானால் அவனால் மக்கள் அடையும் இன்னல்கள் மிகப்பலவாகும். அவர்கள் அச்சத்திற்கு ஆட்படுவர். அடியோடு அழிவர்; அங்குமிங்குமாய் அலைவர்; மயங்கி நிற்பர்.

கொடிய மன்னன் அல்லது ஆட்சியாளனால் ஆளப்படும் ஒரு நாட்டின் அவல நிலையை இதைவிடச் சிறப்பாக வேறு யாரும் விளக்க முடியாது. கொடிய மன்னனால் ஆளப்படும் ஒரு நாடு எப்படி இருக்கும் என்பதை அறிய விரும்புவோர் மேற்காட்டிய பாடலை நினைவு கூரலாம்.

நல்லாட்சி நடத்த விழைவோர் இப்பாட்டின்வாயிலாக அறியத் தக்க உண்மைகள் பலஉண்டு; நல்ல மன்னனென்போன் குடிகளைப் புரக்கும் கோலனாக இருத்தல் வேண்டும். மக்கள் அல்லுடவாழ்வில் நிறைவோடு வாழ அவன் ஏற்பன புரிதல் வேண்டும். அறிவும் ஊனும் நடுவுநிலை திறம்பாத செப்பமும் உடையவனாதல் வேண்டும்.

கம்பன் அயோத்தி மாநகரைத் தன்னிறைவு பெற்ற ஓர் ஒப்பற்ற நாடாகச் சித்தரிக்கிறான். அரசர்கள் யாரும் நிலைத்து ஆட்சி புரிவதில்லை; எனினும் அரசு என்பது எப்போதுமே இருந்து வரும். அரசர்கள் வரலாம்; போகலாம்; அவர்கள் நிலையாக இருக்கவேண்டும் என்பதில்லை. ஆனால் அரசு என்னும் அமைப்போ என்றென்றும் நிலை பெற்றிருக்கும். இந்த அரிய உண்மையைக் கம்பர் பின்வரும் பாட்டில் குறிப்பாகப் பெற வைக்கிறார்.

வயிர வான் பூண் அணி மடங்கல் மொய்ம்பினான்,
உயிர் எலாம் தன் உயிர் ஒக்க ஓம்பலால்,
செயிர் இலா உலகினில், சென்று, நின்று, வாழ்
உயிர் எலாம் உறைவது ஓர் உடம்பும் ஆயினான்.

— பால காண்டம், அரசியற் படலம், பாடல் - 10.

தசரதன் மன்னுயிர்களைத் தன்னுயிர் போல் நடத்திப் பாது காத்து வந்தான். அவனது உடல் அவனது நாட்டில் வாழும் வெவ் வேறுபட்ட மக்களின் ஆன்மாவோடு இரண்டறக் கலந்து நின்றது. வேறுவகையாகச் சொன்னால் தன்னுயிரைப் போற்றுவதுபோலவே தசரதன் தன் நாட்டில் உள்ள எல்லா மக்களது உயிர்களையும் போற்றி வாழ்ந்தான். எனவே நாட்டில் வாழும் அனைத்து உயிருக்கும் மன்னனே உடம்பாக விளங்கினான்.

பொற்பின் நின்றன, பொலிவு; பொய் இலா
நிற்பின் நின்றன, நீதி; மாதரார்
அற்பின் நின்றன, அறங்கள்; அன்னவர்
கற்பின் நின்றன, கால மாரியே.

— பால காண்டம், நாட்டுப் படலம், பாடல் - 59.

அந்நாட்டில் வாழும் ஆடவர்கள் நல்ல குணங்களையே தமக்கு அழகு என்று கொண்டனர். அவர்கள் எப்பொழுதும் உண்மையினின்று வழுவாமையால் நாட்டில் நீதி எப்பொழுதும் நிலைத்து நின்றது, அவர்கள் நேர்மையாக வாழ்ந்தனர். பெண்டிர் தத்தம் குடும்பங்களைத் தம் அன்பினாலும் ஆதரவினாலும் வழி நடத்திச் சென்றனர். பெண்கள் நல்லொழுக்கம் உடையவர்களாய் இருந்ததனால் நாட்டில் தேவையான மழை பொய்யாமல் பெய்தது.

கூற்றம் இல்லை, ஓர் குற்றம் இலாமையால்;
சீற்றம் இல்லை, தம் சிந்தையின் செம்மையால்;
ஆற்றல் நல் அறம் அல்லது இலாமையால்,
ஏற்றம் அல்லது, இழிதகவு இல்லையே.

— பால காண்டம், நாட்டுப் படலம், பாடல் - 39.

மக்கள் அந்நாட்டில் தீய பழக்கவழக்கங்களை மேற்கொள்ளாமையினால் மரணம் குறித்த அச்சம் அங்கே இல்லை. நன்னடத்தையுடையவர்களாய் இருந்ததால் அவர்களிடம் சீற்றம் இல்லாதிருந்தது. மக்கள் நல்லொழுக்கம் உடையவர்களாய் இருந்ததால் அவர்கள் வாழ்வில் நல்லாற்றல் கொண்டவர்களாய் விளங்கினர். வாழ்வில் மேலும் மேலும் விரைந்த முன்னேற்றம் இருந்ததேயன்றி வீழ்ச்சி இல்லை. அறிவு, நன்னடத்தை, நல்லொழுக்கம், நல்ல தன்மைகள், நியாயம், தகுதி, சம உரிமை முதலியவற்றால் அவர்கள் நிறைவாழ்வு வாழ்வு வாழ்ந்தனர்.

கல்லாது நிற்பார் பிறர் இன்மையின், கல்வி முற்ற
வல்லாரும் இல்லை; அவை வல்லர் அல்லாரும் இல்லை;
எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தலாலே,
இல்லாரும் இல்லை; உடையார்களும் இல்லை மாதோ.

— பால காண்டம், நகரப் படலம், பாடல் - 74.

அந்நாட்டில் கல்லாதவர்கள் யாரும் இலர். எனவே இவரை விட இவர் கல்வியிற் சிறந்தவர் என்று கூறுகிறாற் போன்ற நிலையும் அங்கே இல்லை. எல்லாருமே கல்வி அறிவு பெற்றிருந்தனர். எல்லா மக்களும் செல்வமுடையவராய் விளங்கியதால் வறியவர், செல்வந்தர் என எவரையும் பாகுபடுத்த முடியவில்லை.

தாய் ஒக்கும் அன்பின்; தவம் ஒக்கும் நலம் பயப்பின்;
சேய் ஒக்கும், முன் நின்று ஒரு செல் கதி உய்க்கும் நீரால்;
நோய் ஒக்கும் என்னின் மருந்து ஒக்கும்; நுணங்கு கேள்வி
ஆயப் புகுங்கால், அறிவு ஒக்கும்; - எவர்க்கும், அன்னான்.

— பால காண்டம், அரசியற் படலம், பாடல் - 4.

மன்னன் குடிமக்கள் அனைவர் மீதும் ஒரு தாயைப் போல அன்பைப் பொழிந்தான், நல்லன அனைத்தையும் அவன் வாழ்வில் பெற்றிருந்ததால் மக்களுக்குத் தவமாக விளங்கினான். எல்லோரையும் ஒரு நல்ல மகனைப்போல நல்வழியில் நடத்தினான். யாராவது நோயுற்றிருந்தால் அந்நோயினைத் தீர்க்கும் அருமருந்து போலவும் விளங்கினான். அனைவர்க்கும் அவனே அறிவாகவும் நின்று பயன் தந்தான்.

ஓர் இலட்சிய அரசு, முழுநிறைவு பெற்ற தலைநகர், மன்னனின் விரும்பத்தக்க குண நலன்கள் ஆகியவற்றை மூன்று படலங்களில் கம்பன் விரிவாகப் பாடுகிறான். மிக முக்கியமான சில எடுத்துக்காட்டுக்கள் முன்னரே காட்டப்பட்டன. இவற்றின் வாயிலாக ஒரு நல்ல நாடு எது என்பதையும் உயர்ந்த தலைநகர் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும் ஒரு நல்ல மன்னன் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதையும் நாம் எளிதில் உணர முடியும். கம்பன் காட்டும் இலக்கணத்தைக் கொண்டே நாம் ஒரு நல்ல நாட்டை இனம் காண முடியும். கம்பன் காட்டும் இலட்சிய உலகை நாமும் படைக்க வேண்டும் என்கிற உணர்வு இக்காப்பியத்தைக் கற்கும் யாருக்கும் எழும் என்பதில் ஐயமில்லை.

கொள்கை உடைய தம்பி :

ஓர் இளவல் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதற்கு இலக்குவன் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறான். இன்பத்திலும், துன்பத்திலும், கேட்டிலும், ஆக்கத்திலும் இலக்குவன் இராமனோடு இணைந்து நிற்கிறான். அன்புள்ள நண்பனாகவும் அறிவார்ந்த ஆலோசகனாகவும் ஆற்றல்சால் காவலனாகவும் அவன் விளங்குவதைக் கம்பராமாயணத்தில் வரும் பல நிகழ்ச்சிகள் காட்டுகின்றன. ஆரண்ய காண்டத்தில் கவந்தப்படலத்தில் ஒருபாடலில் கம்பர் இலக்குவனைத் 'தன் நேர் இல்லாத் தம்பி' என்று குறிப்பிடுகிறார்.

என்னா முனைவனே, செல்லும் இளங்கோ, இறையோற்கு
முன்னே செல்லும்; முன்னவன், அன்னானினும் முந்த,
தன் நேர் இல்லாத் தம்பி தடுப்பான்; பிறர் இல்லை;
அன்னோர் கண்டார் உம்பரும் வெய்துற்று அழுதாரால்.

— ஆரண்ய காண்டம், கவந்தன் படலம், பாடல் – 34.

இராம இலக்குவர் கவந்தனது நாட்டில் நுழைந்த பொழுது அவ்வரக்கனை நேருக்கு நேர் சந்திக்கின்றனர். இருவருமே, தான் தான் அரக்கனுடன் முதலில் போர் செய்ய வேண்டும் என்று எண்ணினர். ஏனெனில் இருவருமே மற்றவர் இறப்பதை விரும்பவில்லை. இராமன் இலக்குவனிடம், 'தானே அரக்கனுடன் போர் செய்வதாகவும் அவன் தப்பித்துச் செல்லலாம்' என்றும் கூற

இளவல் இலக்குவன் தான் அவனுக்குத் துணை செய்யவே இருப்பதாகவும் தேவைப்பட்டால் தன் உயிரையே தியாகம்செய்வதாகவும் மறுமொழி கூறுகிறான். மேலும் அவன் இராமனை நோக்கிப் பின்வருமாறு பேசுகிறான். "நான் உன்னுடன் காட்டிற்கு வந்ததே நீ காலால் இடும் பணிகளைத் தலையால் செய்வதற்கேயாம். துன்பக் காலத்தில் நான் உனக்கு முன்னர் மரணம் அடையாமல் திரும்பிச் சென்றால் அது எனக்கு மதிப்பாகுமோ? என் தாய் உன் ஆணைகள் அனைத்தையும் நிறைவேற்றுமாறு என்னைப் பணித்தாள். உன் தமையன் இன்னல்களையும் சிக்கல்களையும் எதிர்கொள்ளும்போது அவற்றுடன் போராட நீ தயங்காதே என்றாள். மேலும் இராமன் பகைவர்களால் அழிக்கப்படுவான் என்று நீ உணரும் வேளை வந்தால் நீ அவன் இறப்பதற்கு முன் அவனை முந்திக் கொண்டு மரணத்தைத் தழுவ வேண்டும் என்றும் கூறினாள். அன்பான தமையனே! நானும் என் அன்னையும் உனக்கும் உன் அன்னைக்கும் சேவை செய்வதன் வாயிலாகக் குடிமக்களிடம் நற்பெயரையும் புகழையும்பெறுவோமெனில் நாங்கள் எங்கள்உயிரையும் வாழ்வையும் ஒரு பொருட்டாக மதியாமல் இழப்போம் இந்த உலகின் முடிவில் இவ்வுலகின் எல்லா உயிர்களும் தேவர்களும் அழியினும் கூட நீ அழிக்கப்பட மாட்டாய் என்பது தெளிவு. அப்படி இருக்க இந்தக் காட்டில் ஒரு அரக்கனின் கையால் உன் முடிவு நேர்வதை யாரும் கற்பனை பண்ணிப் பார்க்க முடியுமா? உன் கூற்றை யாரும் ஏற்க மாட்டார்கள். உன் செயலைக் காணும் யாரும் இதனை விரும்பார். 'இராமனால் சீதையை இராவணனிடமிருந்து மீட்டுவர முடியவில்லை. போரில் இராவணனைத் திறமையுடன் எதிர்கொள்ள முடியாமல் ஒரு அரக்கனின் கையில் இறந்துவிட்டானே' என்று மக்கள் கூறுவதைவிட வேறு ஒரு பழமொழி இருக்க முடியும்என்று நினைக்கிறாயோ?" என்றுகூறி இலக்குவன் தன் தமையனிடம்தன்னை அரக்கனுடன் போர் புரிய அனுமதிக்குமாறு வேண்டிநிற்கிறான்.

மேற்கூறியபகுதி அவன்எவ்வாறு தன் தமையன் இராமனிடம் பக்தி கொண்டிருந்தான் என்பதையும் தகுந்த நேரத்தில் தன் தமையனுக்கு நன் முறையில் ஆலோசனை கூறுகிறான் என்பதையும் காட்டுகிறது. இலக்குவனதுவிடாமுயற்சி, உள்ளஉறுதி, அண்ணன் மீது கொண்ட அன்பில் மாறுபாடின்மை, வருத்தத்தில் மனம் தளர்ந்து போய் இருக்கும் அண்ணனுக்குத் தகுந்த அறிவுரை சொல்லும் அவனது திறமை, அண்ணனின் துன்பத்தைக் களையத் தயாராக நிற்றல், அவனது நிலைத்த நற்பண்பு, தோல்வி மனப்பான்மையை விரட்டிவிடும் சக்தி முதலியன போன்ற அவனது பண்பு நலன்கள் அவனைத் தன்னிகரற்ற தம்பிக்கு இலக்கணமாகச் சித்தரித்துக் காட்டுகின்றன. (தொடரும்)

காவியத்தில் திருப்புமுனைகள்

டாக்டர். திரு. இரா. செல்வக்கணபதி,
எம். ஏ., பி. எட்., பிஎச். டி.,
தருமபுரம்.

(மலர் 49, இதழ் 4, பக்கம் 186 இன் தொடர்ச்சி.)

கம்ப சித்திரம் :

நாளை காலை நடைபெற வேண்டிய முடிசூட்டுவிழா, முதல்நாள் இரவில்தடுத்து நிறுத்தப்படுகிறது. திட்டமிட்டவள் மந்தரை. மனம் மாறி வரம் வேண்டியவள் கைகேயி, வரம் வழங்கியவன் தயரதன், பாதிக்கப்பட்டவன் இராமன், காவியத் திருப்பமும் நிகழ்ந்தாக வேண்டும். உயரிய இப்பாத்திரங்களுக்கும் களங்கம், வாராது காத்தல் வேண்டும்! இவை எங்ஙனம் சாத்தியமாகும்? இங்கேதான் கம்ப சித்திரப் பேரழகினைத் தரிசிக்க முடிகிறது.

இராமனை வளர்த்த கைகேயி சூழ்வினையால், இராமன் காடேகும் முதல் திருப்புமுனை அமைகிறது. தீய சூர்ப்பணகை வரவால், சீதை - இராமனிடமிருந்து பிரிக்கப்படும் இரண்டாவது பெரிய திருப்புமுனை ஆரணிய காண்டத்தில் அமைகிறது. இரண்டு திருப்புமுனைகளையும் கம்பன் கையாளும் திறம் வியப்பூட்டி நிறைவிக்கிறது.

முதல் திருப்பம் :

.........' இராமன் நாளையே பூமகள் கொழுநனாய், புனையும் மௌலி, இக்கோ நகர் அணிக ' என வள்ளுவன் இராமபிரானின் பட்டாபிடேகச் செய்தியை நகரவர்களுக்கு அறிவிக்கிறான். தடையேதும் இன்றி மறுநாளே இராமன் முடிசூடியிருந்தால் இராம காதை அயோத்தியோடு நிறைந்திருக்கும். கதையின் மிகப்பெரிய திருப்பத்திற்கு, மிகச்சிறிய கூனியாகிய மந்தரையின் இடையீடு காரணமாகிறது. காவியத்தின் முதல் வரவாகக் கூனி தோன்றும், முதல் காட்சியிலேயே, கம்பன், அவள் வருகையை,

" இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல்
துன்னரும் கொடுமனக் கூனி தோன்றினள் "

எனக் கூறுகிறான். கூனியின் வருகை, கைகேயி மனமாற்றம், தயரதன் வரம், இராமன் காடேகல், சீதை பிரிக்கப்படல், இராமன் இலங்கை சேரல், இராவண வதம் எனப் பின் நீளப்போகும் கதை முழுவதையும் உட்கொண்டகம்பன், கூனியின் வருகையின்போதே, அவள் தோற்றம், இராவணன் இழைத்த தீமைகள் ஓர் உருக் கொண்டது போல் அமைந்துள்ளது என்று விடுகதைபோல், மாபெரும் வரப்போகும் திருப்புமுனையின் உண்மை விளைவை முன்னதாகவே அறிவிக்கத் துணிகிறான். நடந்து முடிந்த செயல் ஒன்றிற்கு மூலகாரணம் கூறுவது காவியமரபு என்பதைச் சிலம்பில் காண்கிறோம். மாடல மறையோன், கனகவிசயர் தலை கல் சுமக்கக் காரணம், மாதவியின் கானல்வரிப் பாடல்களே எனப் பேசும்போது, ஒன்றால் ஒன்று நிகழ்ந்தேறியதென உணர முடிகிறது. இங்கோ, பின் கதை இதுவரை பயில்வார் அறியாதிருக்கும் போதே இராவணன் இழைத்த தீமை ஓர் உருக்கொண்டது போல் கூனி தோன்றினாள் எனக் காவிய முடிவிற்கு முன் அடையாளம் காட்டுகின்றான் கவிச்சக்ரவர்த்தி.

ஓர் அரிய நுட்பம் :

இங்கே ஓர் அரிய நுட்பம் உண்டு! மனம் மாறி, வரங்கேட்டு, இராமனைக் காட்டுக்கு அனுப்பியவள் கைகேயியே! காப்பியத் திருப்பத்திற்குக் காரணமானவள் கைகேயியேஎன்றாலும், இராமன் காடேகியதற்கு அவளைக் காரணமாக்கி விடக்கூடாது என்ற கம்பனின் பாதுகாப்புஉணர்ச்சி, கூனியை ஆளாக்கி இடைப்புகுத்தி விடுகதை போல் அவளை அறிமுகப்படுத்தத் தூண்டுகின்றது. உறங்கிக் கிடந்த கைகேயியைக் கூனி, அவள் செம்பொன் சீறடி தொட்டு எழுப்புகின்றாள். கவிச்சக்ரவர்த்தி, '..... சீறடி கைகளின் தீண்டினாள்! காலக்கோள் அனாள்' எனப் பேசுகின்றான். தொட்டாள், வருடினாள், உசுப்பினாள், அசைத்தாள் என இவற்றுள் ஒன்று பெய்யாது 'தீண்டினாள்' என்ற சொல் பெய்த கம்பன், கூனியாகிய நச்சுப் பாம்பு, தன்னிடம் உள்ள விடத்தைக் கைகேயிபால் செலுத்தி, அவளையும் நஞ்சாக மாற்றுகின்றது எனச் சொல்லால் காப்பியம் நடத்துகின்றான்.

கூனி எழுப்ப, கைகேயி கண் விழிக்கிறாள்! கம்பன் இதனைக் கூற வருகிறான். 'தீண்டலும் உணர்ந்த அத்தெய்வக் கற்பினாள்' எனக்கண் விழித்தாளைத் தெய்வக் கற்பினாள் எனப் பாராட்டிக் கதை தொடர்கிறான். கைகேயி குறையுடையவள் என்றோ, அவள் எண்ணிச் செய்தே இராமனைக் காட்டுக்கு அனுப்பினாள் என்றோ, அவள் கற்புக் குறைபாடு உடையவள் என்றோ கற்பார் நினைத்து விடலாகாது என்ற கவிஞன் உள்ளம். கண் விழித்தாளைத் தெய்வக் கற்பினாள் எனப் பாராட்டிப் போற்ற வைக்கிறது.

திருப்பங்களில் நீதி காட்டுதல் :

நாம் சிறிது எனக் கருதாது செய்த தீமை எங்ஙனம் பெருகுக் கொள்ளும் என்பதனையும், சிறியர் என எவரையும் இகழ்தல் செய்யற்க என்பதையும் நீதிகளாகக் கம்பன் பெய்கின்றான். கூனி 'பண்டைநாள் இராகவன் பாணியில் உமிழ் உண்டை உண்டதனை தன் உள்ளத்து உன்னுவாள். அன்று இராமன் பிள்ளைப்பிராயத்தில், தன்கை அப்பில், மண் உருண்டை வைத்துக் கூனிநடந்த மந்தரைக் கூன் முதுகில் அடித்தான். அவள் நெஞ்சம் கருக்கொண்டது. அன்று மண்ணால் அடித்தான். இன்று அந்த மண்ணை இவனுக்குக் கிடைக்காமல் செய்கிறேன் என்று கறுவும் கூனியின் பழிவாங்கும் உணர்ச்சியே காப்பியத்திருப்பத்தின் முதல் காரணம் என்பது அடையாளம் காட்டப்படுகிறது.

தவறுக்கு மீறிய தண்டனை :

வஞ்சித் தொழுகு வாரும், தீயர்களும் சிறு பிழைகளைக் கூடப் பெரிது படுத்தி, தவறுக்கு மீறிய தண்டனை வழங்கத் துணிவர் என்பதைப் பாஞ்சாலியின்சிரிப்புக்காக அவளைத்துகில் உரியவைத்த துரியோதனன் வஞ்சத்திலும், கூனியின் கொடுமையிலும் இனங் காண முடிகிறது. கூனி அடிமேல் அடி அடிக்கிறாள், தளராதுநின்று மகிழ்ந்திருந்த கைகேயி நெஞ்சம் சிறிது சிறிதாக மாறத்தொடங்குகின்றது. 'இராமனைப் பயந்த எற்கு இடர் உண்டோ' என இராமனைப் பெற்ற அன்னையாகவே கருதி மகிழ்ந்திருந்தவள், கூனி வஞ்சத்திற்குப் பிறகு என்மகன் எனப் பரதனை எண்ணத் தொடங்குகின்றாள். அடிமனத்தில் மெள்ளமெள்ள ஏற்பட்ட மாற்றம் கைகேயியின் உறுதியைக் குலைக்கிறது. அவள் மனம் மாறுகிறாள். காவியத்தின் முதல் திருப்புமுனை வலுப் பெறுகிறது. கவிச்சக்ரவர்த்தி,

> " தீயமந்தரை இவ்வுரை செப்பலும், தேவி
> தூய சிந்தையும் திரிந்தது......"

எனக் கைகேயியின் மன மாற்றத்தைப் பதிவு செய்கிறான். இங்கேயும் கைகேயியைத் தேவி' என்றும், அவள் மனத்தால் தூயாள் என்பதை 'தூய சிந்தையும்' என்றும் பதிவு செய்து காட்டுகின்றான்.

பிறர் பெறா வெற்றி :

காவியத் திருப்பு முனைகளுக்குக் காரணம் காட்டி, வினைவுகளை விளக்குவதில் கம்பன் பெற்ற வெற்றியைத் தமிழ் இலக்கியத்தில் வேறு எவரும் பெற்றிலர்.

கைகேயி மனமாற்றத்தின் நேரடி விளைவு இராமன் காடு ஏகுவதுதான்! ஆயின் இங்கேயும் கம்பன் அதனைக் குறிக்கவில்லை. தேவி தூய சிந்தையும் திரிந்தது. எதற்காக? "சூழ்ச்சியின் இமையோர் மாயையும், அவர் பெற்ற நல்வரம் உண்மையானு, ஆய அந்தணர் இயற்றிய அருந் தவத்தானும்" என்கிறான். கைகேயி மனமாற்றம் கூனியால் நிகழ்ந்ததே! கவிஞனோ! இம்மாற்றத்திற்குத் தேவர்களின் மாயையையும், அவர் பெற்ற வரபலத்தையும், அந்தணர் அருந்தவத்தையும் காரணங்களாகக் கற்பிக்கின்றான். நல்லார் ஒருவரின் மனமாற்றத்தால் விளைந்த தீமைகளைப் பட்டியல் இடாது, விளையப்போகும் நன்மைகளை இனங்காட்டுவது தெய்வமாக் கவிஞர்களின் பண்பாட்டுக்குச் சான்று கூறுகின்றது. இராமன் காடு ஏகாதிருந்தால் தேவர்களும், முனிவர்களும் வாழ்வு பெற்றிருக்க இயலாது! எனவே தெய்வக்கற்பினளின் மனமாற்றத்திற்கு நேரடிக் காரணம் கூனிபோலத் தோன்றினாலும் மறைமுதுக் காரணங்களும் வேறு சில உண்டு என்பதைக் கவிஞன் இனங்காட்டிப் பாத்திரத்தின் மேல், படிப்பார் கொள்ளும் சினத்தைத் தணிக்க முயல்கிறான்.

சிந்தை திரிந்த கைகேயி கூனி சொல்வழி நின்று இருவரம் கேட்கத் துணிந்து விடுகிறாள்! அவள் நல்லநன் துறக்கிறாள்; இரக்கமின்மை அவள் உள்ளத்துள் நிறைகிறது. இதுவரை, கூனி வருகையிலும் சரி, கைகேயி மனமாற்றத்திலும் சரி, இராமனைப் பற்றியே குறிக்காத கவிஞன், முதன் முதலாக இங்கேதான் இராமனைக் குறிக்கிறான். அப்போதுகூட இராமன் துயர்பெற்றான் என்றோ, பெறுவான் என்றோ கூறாது. பின் விளையப் போவதனைப் பெருமிதத்தோடு பேசுகின்றான். ஒருபக்கம் தேவரும், முனிவரும் இயற்றிய அறங்கள் கைகேயி மனம் மாறக் காரணங்கள் என்கிறான். அடுத்த பாடலிலேயே,

அரக்கர் பாவமும், அல்லவர் இயற்றிய அறமும்
துரக்க நல்லருள் துறந்தனள் தூமொழி மடமான்

எனப் பேசுகின்றான். தீமையின் வீழ்ச்சி ஒருபக்கம்; நன்மையின் வாழ்க்கை ஒருபக்கம்; இரண்டும் வெற்றி பெறுகிறது. கைகேயி மனம் மாறுகின்றாள்!

திருப்பத்தின் இன்றியமையாமை ;

எல்லாவற்றுக்கும் மேலாகக் காவியத்தின் இத்திருப்பம் எவ்வளவு இன்றியமையாதது என்பதனைக் கவிஞன் தன் கூற்றாகவே பதிவு செய்து காட்டுகின்றான். கைகேயி இராமன்பால் இரங்கி, கூனி சொல் கேளாது, மனம் மாறாதிருந்திருந்தால், இராமனை

உலகம் எங்கே அறிந்திருக்கப் போகிறது. இரக்கத்தைவீசி எறிந்து, நெஞ்சுள் அரக்கத்தன்மையை அவன் அன்று வரித்திராவிட்டால் இராமாவதாரமே நிறைந்திருக்காது! கம்பன் காப்பியப் பண்பைப் பதிவு செய்கிறான்.

" இரக்கம் இன்மை அன்றோ! இன்று இவ்வுலகங்கள் இராமன்
பரக்கும் தொல்புகழ் அமுதினைப் பருகுகின்றதுவே!

என்று பாராட்டிப் பெருமிதம் கொள்கிறது கவிதை நெஞ்சம்! காவியம்பயில்வோர் கதைநிகழ்வின் மேலேயே நின்று சுற்கின்றனர். அவர்களுக்குக் காப்பிய முடிவு தெரியாது. ஆனால், கதை நடத்துகின்ற கவிஞன் முடிவினை அறிந்தே கதை நடத்துகின்றான். அயோத்தியா காண்டத்தில் வாசகர்கள் நிற்கும் போதே, கி. பி. 12 ஆம் நூற்றாண்டில்தான் வாழும் காலத்தில் இராமன் புகழ் பரந்து விரிந்து கிடப்பதால் பெருமிதமுற்று, பின்விளைவின் பெருமிதத்தால் முன்நிகழ்வுக்குச் சமாதானம் கூறுகின்றான். இது ஓர் கவித்துவப் பெருமிதம்! கவிஞர்களுக்கே உரிய உரிமைத்தடம்! இதை அவர்கள் உரியநேரத்தில் உரியவாறு பயன் கொள்வர். ஒரு தீமையிலிருந்து முடிவாக ஒரு நன்மை விளையுமானால், அந்தத் தீமையைக்கூட நன்மையாக ஏற்றுப் போற்றலாம் என்று காவியம் சார்ந்த உலகியலை இத்திருப்புமுனையில் கவிச்சக்ரவர்த்தி படிப்பினையாகப் புகட்டுகின்றான். (தொடரும்)

தேவாரம் - பண்முறை, தலமுறை

மூவரும் பாடிய தேவாரத் திருப்பதிகங்களை இருவகையாக வகுத்துக்காட்டுவது மரபு. மூவரும் பாடிய திருப்பதிகங்களில் அமைந்த பண்களை வகைப்படுத்தி, ஒவ்வொரு பண்ணுக்கும் உரிய திருப்பதிகங்களை முறையாகத் தொகுத்து ஏழு திருமுறைகளாக அமைத்திருப்பது பண்முறை என்று கூறப்பெறும். இதுவே பழையமுறை என்பர். பின்னர், திருப்பதிக்கோவையில் 'கோயில் திருவேட்களம், நெல்வாயில், கழிப்பாலை' எனக் குறித்தமுறையையொட்டித் தேவாரப் பாடல்பெற்ற திருத்தலங்களையெல்லாம் தில்லைப்பெருங்கோயில் முதலாக வரிசைப்படுத்தி அவ்வத்தலங்களுக்குரிய தேவாரப் பதிகங்களை ஏழு திருமுறைப் பாகுபாட்டிற்கேற்ப முறைப்படச்சேர்த்து அமைத்தது தலமுறை எனப்பெறும். புண்ணியத் திருத்தலங்களை வழிபட விரும்பிய சிவநேசச் செல்வர்கள் தாம் வழிபட விரும்பிய ஒவ்வொரு தலத்திற்கும் அமைந்த திருப்பதிகங்களை ஒருசேரப் பயிலுவதற்கு உதவும் வகையில் அமைக்கப் பெற்ற இத்தலமுறைப் பகுப்பு பிற்காலத்தில் தோன்றியதாகும் என்பர். —சைவ சமயம் வரலாற்றுப் பார்வை.

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வரலாற்றுச் சிந்தனை

வித்துவான் திரு. தா. குருசாமி
மதுரை.

முன்னுரை :

சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாண்டியன் கோச்சடையன் ரண தீரன் காலத்தில் வாழ்ந்தவர் என்று † வரலாற்றாசிரியர் கருதுவர். சுந்தரமூர்த்திகள் சேரமான் பெருமானுடன் மதுரை மாநகர்க்குச் சென்றபோது, அவர்களைப் பாண்டிய வேந்தன் ஒருவனும் அந் நகரில் முன்னரே போய்த் தங்கியிருந்த அவன் மருகன் சோழ மன்னன் ஒருவனும் எதிர் கொண்டழைக்க, எல்லோரும் ஆலவா யண்ணலை வணங்கியதாகப் பெரியபுராணம் கூறுகிறது. சுந்தரரின் திருப்பூவனம் திருப்பரங்குன்றத் தேவாரங்களில் இதற்குச் சான்றுள்ளது. சுந்தரமூர்த்திகளின் காலம் கி. பி. 8ஆம் நூற்றாண் டின் முற்பகுதி என்பர் ‡ பண்டாரத்தார்.

சுந்தரர் காலப் பல்லவன் :

'காடவர்கோன் கழற்சிங்கன்' என்ற பல்லவ வேந்தனைப் பாடிய சுந்தரரின் பாடலைக் கொண்டு, கி. பி. 690 முதல் 720 வரை ஆட்சிபுரிந்த பல்லவவேந்தன் இரண்டாம் நரசிம்மவர்மனாகிய இராசசிம்மபல்லவன்காலம் என்று பேராசிரியர்வெள்ளைவாரணனார்$ கருதுவார். சுந்தரர் வாழ்ந்த காலம் பல்லவர் சேரர், சோழர், பாண்டியர் அனைவரும் சைவம் போற்றிய காலமாகும். சிறுகச் சிறுக ஒற்றுமை நிலவிய காலமும் ஆகும். இனி நமது சிந்தனைக்கு வருவோம்.

திருப்புறம்பயம் - திருப்புமுனை :

தமிழகத்தில் பல்லவப் பேரரசு பாண்டியரின் எழுச்சியினால் வலிகுன்றியது. சோழர், பாண்டியர்க்கு அடங்கியே இருந்தனர்.

---

†. History of Pandyas. Dr. K. V. Raman Page 65.
‡ பிற்காலச் சோழர் சரித்திரம் - பக்கம் 6.
$ பன்னிரு திருமுறை வரலாறு - பக்கம் 395.

விடுதலை உணர்வு கொண்ட சோழர்கள் பல்லவரோடு சேர்ந்து பாண்டியரை உறவு முறை கருதாமல் எதிர்த்தனர். சுந்தரரின் காலத்தில் வாழ்ந்த சோழமன்னன் பாண்டியனின் மருமகனுவன். சோனுடு அக்காலத்தில் பல்லவ மன்னனிடமிருந்து விடுவிக்கப் பட்டது. இப்போர் முழுவதும் குடமூக்கு என்று அழைக்கப்படும் கும்பகோணத்திற்கு அருகிலேயே நடந்திருக்கிறது- ஆனால் திருப் புறம்பயப் போரே சோழநாட்டை இறுதியில் பாண்டியரிடமிருந்து விடுதலைபெற வைத்தது. விசயாலயன் தந்தை முயற்சி விசயாலயன் மகன் ஆதித்தன் காலத்தில்தான் பாதித்தது.

பல்லவரும் பழையாறையும் :

பாண்டியர் சோழர் உறவு முறையால் சோனுடு பாண்டியர் வசம் ஆகாதவாறு பல்லவமன்னர் பழையாறையை நந்திக் கிராமம் என்று பெயர் சூட்டி, பாண்டியர் எழுச்சி பெருதவாறும், சோழர் விடுதலை பெருதவாறும் தடுத்துக் கொண்டே இருந்தனர். சுந்தரர் காலத்தில் இடவை - குடமூக்குப் போர் பல்லவர்க்கும் - பாண்டி யர்க்கும் நடந்ததாகத்தெரிகிறது. இப்போரில்முடிவு பாண்டியர்க்கு வெற்றியாயிற்று. பாண்டியன் ரணதீரன் காலத்தில் முடியாத செயலை அவன்மகன் இராசசிம்மன் மைத்துனச் சோழனுக்காகப் போராடிப் பல்லவரிடம் இருந்து சோழநாட்டை விடுவித்தான்.

பல்லவன் சிறைப்படல் :

இப்போரில் நந்திவர்மப் பல்லவன் சிறைப்பிடிக்கப்பட்டு நந்திக்கிராமத்தில் அடைக்கப்பட்டான். இதே நந்திவர்மன் சிறந்த சிவனடியாராகச் சுந்தரரால் கூறப்படுகிருர். பாண்டியரின் எழுச்சி யும், வீரமும் சோழ பல்லவர்களின் உறவு கொண்டிருந்தும் கூட நாட்டாசை - மண்ணுசை அதைத் தடுத்தது. பல்லவப் பேரரசு சோழநாட்டில் ஒழிந்து பாண்டிப்பேரரசு தோன்றிற்று. இப்போரில் திருப்புறம்பயத்தில் ஒரு பல்லவமன்னன் நடுகல் ஆகிருன். இங்குள்ள கச்சியாண்டவர் கோயில் - திருப்புறம்பயப் போருக்கு முன்பே உள்ளதால் இப்பள்ளிப்படைக் கோயில் நந்திவர்மனுடைய தாகத்தான் இருக்கவேண்டும். பண்டாரத்தார் பல்லவமன்ன னுடையது என்பர்.

பல்லவரும் சுந்தரரும் :

பல்லவப் பேரரசில் பிறந்து வளர்ந்த சுந்தரமூர்த்திகள் தன் காலப் பல்லவரைக் கீழ்க்கண்டவாறு புகழ்கின்ருர்.

" மண்ணுலகங் காயல்பூண்ட உரிமையால்
பல்லவர்க்குத் திறைகொடா மன்னரை மறுக்கஞ்செய்யும் "

என்றும்,

" கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற் சிங்கன் "

என்றும் பாராட்டிப் பேசிய மன்னன் பாண்டியரிடம் பழையாற்றுப் போரில் (நந்திக் கிராமம்) தோற்று, திருப்புறம்பயத்தில நடுகல் ஆனான்.

சுந்தரரின் மனவேதனை :

சுந்தரமூர்த்திகள் சமயச் சான்றோர். எப்பொழுதும் நடுவுநிலை வகிப்பவர். தம்கால முடிமன்னர்களிடம் சமய அளவில் உறவு பூண்டவர். அரசியல் என்ற பகை உலகில் அணுகாதவர். எனினும் சுந்தரர் குடமூக்குக்கு அண்மையில் உள்ள 'எதிர்கொள்பாடி' என்ற சோணாட்டுத் தலத்தைப் பாடும்போது,

" மத்தயானை ஏறி மன்னர்சூழ வருவீர்காள் !
செத்தபோது யாருமில்லை சிந்தையில் வைம்மின்கள் "

என்று தம்காலப் பல்லவ மன்னனைச் சிந்தித்து வேதனைப்படுகிறார்.

பொருண் மொழிக் காஞ்சி :

திருப்புறம்பயம் குடமூக்குக்கு அண்மையில் உள்ள சிவத்தலம். இத்தலத்திற்கு எழுந்தருளி வணங்க வந்த, சுந்தரமூர்த்திகள் பல்லவப் பெருமன்னன் இவ்வூரில் நடுகல்லாகி - கச்சியாண்டவர் கோயில் என்ற நிலையில் விளங்குவதைப் பார்வையிட்டு மிகவும் மனவேதனைப்பட்டார். பல்லவப் பேரரசு எப்படிப் பட்டது? சோணாட்டையும் அடக்கிய அப்பெரிய பேரரசு விரைவில் ஒழிந்தது. அணிதேர் புரவி ஆட்பெரும்படையுடன் வாழ்ந்த பேரரசு-சிற்றரசு ஆனது. தவளைக்குஞ்சு பிறக்கும்போது வாலுடன்பிறந்து. வளர்ந்த பின்பு அவ்வால் மறைந்துவிடும் தன்மைபோல, - 'பேரரசு ஒன்றுமில்லாத அரசாகவும் ஒழியும்' - என்று சிந்திக்கின்றார். அச்சிந்தனை சுந்தரர் உள்ளத்தில் பாவடிவம் பெறுகிறது. கொல்லிப்பண்ணில் பொருண்மொழிக் காஞ்சியாக உயிர்க்கு இம்மை மறுமைகளில் உறுதி தருகிற பொருளைக் கூறுவாரானார்.

வரலாற்றுப் பின்னணி :

சுந்தரர் திருவதிகை வீரட்டானத்தில் பாடும்போது நெடுமாறனைச் சிந்திக்கின்றார். இம்மன்னன் காலத்தில் இவர் வாழவில்லை எனினும் இவர் மகன் காலத்தில் வாழ்ந்த சுந்தரர், நெடுமாறனைப் பாராட்டி இத்தலத்தில் சிந்திக்கின்றார். அச்சமயம் பாண்டியப் பேரரசு நடுநாட்டிலும் பரவி இருந்ததை வரலாற்றுப் பின்னணியோடு பாடுகிறார்.

திருப்பு முனை :

திருப்புறம்பயம் அக்காலம் போர் நிகழும் இடமாக இருந்துள்ளது. கி. பி. 9 ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த விசயாலயனின் திருப்புறம்பயப்போர் சோணாட்டை விடுதலை பெற வைத்தது. அதன் நினைவாக விசயாலயன் மகன் ஆதித்த சோழன் திருப்புறம்பயத்தலத்து இறைவற்கு நிறையத் திருப்பணி செய்துள்ளான். இதன் மூலமாக அறியும் செய்தி. சோழர் முதலில் பல்லவர்க்கடிமை; பின்பு பாண்டியர்க்கடிமை; பிறகு விடுதலை பெற்றுப் பிற்காலச் சோழப் பேரரசு கண்டனர்; சோழர் பாண்டியரோடு உறவு பூண்டு பல்லவரை எதிர்த்த காலத்தில் சுந்தரர் வாழ்ந்தனர். பல்லவ மன்னர் பேரரசில் வாழ்ந்தவர் சுந்தரர்; அப்பல்லவமன்னர் பேரரசு ஒழிந்ததையே கீழ்க்கண்ட தேவாரத்தில் குறிப்பிடுகிறார்.

படையெலாம் பகடார வாளிலும்
பௌவஞ் சூழ்ந்தர சாளிலும்
கடையெலாம் பிணைத் தேரைவால்;
கவலாது எழு மடநெஞ்சமே!
மடைஎலாம் கழுநீர் மலர்ந்து
மருங்கெலாம் கரும்பாடத் தேன்
புடைஎலாம் மணம் நாறு சோலைப்
புறம்பயம் தொழப் போதுமே !

முடிவுரை :

சுந்தரரின் திருப்புறம்பயத் தேவாரம் பொருள் மொழிக்காஞ்சியாக - நிலையாமையை உணர்த்துகிறது. பெற்ற வாழ்வையும் சிறுகாலே வாணிபம் செய்துஉய்க என்றும், வல்வினை சாராதுவாழப் புறம்பயம் தொழுமின் என்றும் சுந்தரர் சிந்திக்கின்றார். அரசியல் வாதிகட்கு அறிவுறுத்தும் இத்தேவாரம் - வாய்த்த பதவியை 'நல்லாற்றான் நாடி அருளாள்க' என்று சிந்திக்க வைக்கிறார். வரலாறு சுந்தரர் காலத்தோடு முடிவதில்லை- அது ஒருதொடர்கதை!

போதமும் சித்தியும்

டாக்டர். திரு. மு. சிவச்சந்திரன்

சிவஞான போதத்தின் இரண்டாம் நூற்பா நான்கு அதிகரணங்களைக் கொண்டுள்ளது. 1. அவையே தானேயாய் 2. ஆணையின் இருவினையின் 3. போக்குவரவு புரிய 4. ஆணையின் நீக்கம் இன்றி நிற்கும்.

இறைவன் ஒடுங்கிய உலகத்தை மீளப்படைத்தல் இயற்றும் பொழுது, உயிர்களை அச்செயலில் அகப்படுத்தி நிற்கச் செய்வன் ஆதலின், "அவனுக்கும் உயிர்கட்கும் இடையே உள்ள இயைபு" என்ன? - எத்தகையது? என்னும் ஐயம் தோன்றுகிறது. அவ்ஐயத்திற்கு விடை காண்பதே இவ் அதிகரணத்தின் நோக்கமாகும்.

இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள இயைபினைப் பலர் பல விதமாகக் கூறிவருகின்றனர். ஏகான்மவாதிகள், கடவுளே உயிர்கள்; உயிர்களே கடவுள் எனக்கூறிவருகின்றனர். பொன்னும் அணியும் போலக் கடவுளும் உயிரும் விளங்குகின்றனஎன்பது இவர்களின் கருத்து. இது அபேதவாதம் எனப்படும். சிலர் கடவுள் வேறு, உயிர்கள் வேறு என்று கூறிவருகின்றனர். இவர்கள் துவிதவாதிகள் எனப் படுகின்றனர், கடவுளும் உயிரும் ஒளியும் இருளும் போல மறுதலையான பொருள்கள் என்பது இவர்கள் கருத்து. வேறுசிலர் கடவுளும் உலகமும் வேருகவும் இருக்கின்றன; ஒன்ருகவும் இருக்கின்றன என்பர். இவர்கள் பேதாபேதவாதிகள் எனப்படுவர். இவர்கள் இங்ஙனம் கூறுவதற்கு உவமானமாகச் சொல்லையும் பொருளையும் காட்டுவர். 'சிவப்பு' என்னும் சொல் வெகுளிப் பொருளில் வரும் என்பது தொல்காப்பியர் கருத்து. "கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள" என்பர், இவ்விடத்தில்சொல்லும்பொருளும் வேறுவேருக இருக்கின்றன. 'சிவப்பு' என்பது ஒரு தனிச் சொல் - 'வெகுளி' என்பது தனிப்பண்பு. 'தெவ்வுப்பகையாகும்' என்னும் தொல்காப்பிய நூற்பாவில் சொல்லும் பொருளும் ஒன்ருக விளங்குகின்றன. 'தெவ்வு' என்ருலே பகையை மட்டுமே குறிக்கும் ஆதலின் ஒன்ருக இருக்கிறது என்பது கருத்து. இத்தகைய விளக்கத்தைக் காட்டிப் பேதாபேதவாதிகள் நிறுவுவர்.

இவர்களின் தனித்தனியான கருத்துக்களை மறுத்து, கடவுளுக்கும் உலகுக்கும் உள்ள இயைபினை அதாவது ஒன்ருயும் வேருயும்உடனுயும் நிற்கிருன் எனஇவ் வதிகரணம் தோன்றியுள்ளது.

இவற்றில் முதலாவதாக ஒன்றுமாற்றிற்கு எடுத்துக்காட்டுக் கூறுகின்றார் ஆசிரியர்.

உயிரானது, உடம்பு, ஐம்பொறி முதலிய கருவிகளைக்கொண்டு நிற்கும் பொழுது, உடம்பிற்கு இடப்பட்ட பெயரைச் சொல்லிப் பிறர் அழைத்தால், அவ்வுடம்பேயாய், உயிர் நின்று, "ஏன்?" என்று கேட்கிறதல்லவா? அதுபோலவே இறைவனும் உயிர்களோடு நிற்பன் என்கிறார். அவ்வாறு நின்ற போதும் அவன் உயிர் ஆகமாட்டான்; உயிர் அவனாக ஆகாது. 'ஏன்?' என்று உயிர் கேட்கும் அளவிற்கு உடம்போடு ஒன்றி நின்ற போதும் உயிர் உடம்பாகாது; உடம்பு உயிர் ஆகாது அல்லவா? அதுபோலவே ஆகும். உயிர் பிறர் அசைத்த பொழுது உடம்போடு ஒன்றும் பின் வேறும் ஆகிவிடுதல் போல இறைவனும் உயிரோடு ஒன்றும் வேறும் நிற்பன் என உணர்தல் வேண்டும். இக்கருத்துக்களை,

"சட்டும் உறுப்பும் கரணமும் கொண்டுள்ளம்
இட்டதொரு பேர் அழைக்க என் என்றுக்(கு) — ஒட்டி
அவன் உளமாகில்லான் உளம் அவனுமாட்டா(து)
அவன் உளமாய் அல்லனுமாம் அங்கு"

என்னும் வெண்பா விளக்குகிறது. (தொடரும்)

தேவாரப் பாடல்களின் எண்ணிக்கை

தேவாரப் பதிகங்கள், சம்பந்தர்பாடியவை 1600 பதிகங்களும், திருநாவுக்கரசர் பாடியவை 4900பதிகங்களும் சுந்தரர் பாடியவை 3800 பதிகங்களும் ஆக 10300 பதிகங்கள் என்று கூறுவர். ஆயினும் நம்பியாண்டார் நம்பி, தில்லையில் செல்லரித்துக்கிடந்த ஏடுகளைச் செம்மைப்படுத்தி, திருஞானசம்பந்தர் தேவாரப் பதிகங்கள் 384 ம், திருநாவுக்கரசர் தேவாரப் பதிகங்கள் 310 ம், சுந்தரர் தேவாரப் பதிகங்கள் 100 ம் மட்டுமே தொகுத்தார் என்பதை,

"பண்புற்ற திருஞான சம்பந்தர் பதிகமுந்நூற்று
எண்பத்து நான்கினுள் இலங்குதிரு முறைமூன்று
நண்புற்ற நாவரசர் முந்நூற்றேழ் மூன்றினுல்
வண்பெற்ற முறையொன்று நூற்றினுல் வன்றொண்டர்"

எனவரும் பகுதியால் அறியலாம் ஆயினும் இப்பதிகங்களைமுதலில் அச்சிட்டபோது திருஞானசம்பந்தர் பாடியனவாக 383 திருப்பதிகங்களே இருந்தன. ஏட்டுச் சுவடிகளில் காணப்படாமல் எஞ்சிய திருவிடைவாய்ப் பதிகம் அவ்வூர்க் கல்வெட்டினின்று படி எடுக்கப்பட்டுப் பின்னர்ச் சேர்க்கப்பட்டது மேலும், அப்பர் பாடியனவாகக் குறிப்பிடப் பெற்றுள்ள 310 திருப்பதிகங்கள் இன்று 312 திருப்பதிகங்களாக அச்சிடப்பெற்றுள்ளன. எனவே சம்பந்தர் பாடியவை 384 திருப்பதிகங்கள்; அப்பர் பாடியவை 312 திருப்பதிகங்கள்; சுந்தரர் பாடியவை 100 திருப்பதிகங்கள். மொத்தமுள்ள இவ்வெழுநூற்றுத் தொண்ணூற்றாறு திருப்பதிகங்களிலும் இன்றுள்ள மொத்த பாடல்களின் எண்ணிக்கை 8250 ஆகும்.

— சைவ சமயம் வரலாற்றுப் பார்வை.

புகழ்த்துணையார், கோட்புலியார்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம்.ஏ., பி.எட்.,
தருமபுரம்

[தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் 4—3—1990 ஆங்கிலமாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தையொட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

காலைக் கதிரொளி பரவுமுன்னே எழுந்து கொண்டேன்! அமைதியே உருவாக அமைந்த தருமையில் அன்று அருளுபதேசம்! குளித்து, வணங்கி, உண்டு புறப்பட்டேன். மதுரையிலிருந்தும் திருச்சியிலிருந்தும் அன்பர்கள் மாதம் தவறுமல் வந்து, கேட்டு இன் புற்றுப் பயன் பெற்றுச் செல்லும்வண்ணம் குருமணிகளின் இனிய உபதேசம் மன அமைதியைத் தருகிறது! ஆம்! அடியேனுக்கும் அந்தப் பாக்கியம் உண்டு.

திருமடத்துக் காவலர் மணி 10 என்பதற்கு அடையாளமாக நான்குமணி அடித்தார். ஓசைஊரெல்லாம்பரவிற்று. துர்க்கையைத் தொழுதுகொண்டிருந்த அடியேன் விரைந்துவந்து சொக்கநாதரை வழிபட்டேன். பண்டாரக்கட்டில் அன்பர்கள் சென்றுகொண்டிருந் தனர். உள்ளே சென்று வணங்கித் திருநீறு பெற்று அமர்ந்தனர். குருமணிகள் அன்றைய புராண உபதேசத்திற்குச் சான்றாக அமைந்த சில தேவாரப் பாடல்களைப் பாடுமாறு பணித்தார்கள். திருமுறைப்பாராயணம் ஆயிற்று. புகழ்த்துணையார், கோட்புலியார் புராணங்கள் அன்றைய உபதேசப் பொருள்கள். உபதேசம் தோத்திரத்துடன் தொடங்கிற்று.

முதலில் மாதச் சிறப்பு அருளிப் புகழ்த்துணைநாயனர் புராணம் உபதேசித்தார்கள். "புடை சூழ்ந்த புலியதன்மேல் அரவாட ஆடி பொன்னடிக்கே மனம் வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்" என்பது சுந்தரர் அருளிய திருத்தொண்டத் தொகைத் தொடர். புலித்தோல் பெருமான் திருஇடையில் விளங்குகிறது. அதன்மேல் பாம்புகள் ஆடுகின்றன. அங்ஙனம் ஆடுமாறு இறைவன் திருநடனம் செய்கின்ருன் என்னும் கருத்தமைய 'ஆடி' என்னும் சொல் ஆடுபவனுகிய சிவபெருமான் எனப் பொருள்கொள்ளவேண்டும்.

ஆடி என்பது எச்சமன்று. வினையால் அணையும் பெயர் என உரை விளக்கம் அருளினர்கள். சுந்தர் தேவாரத்தில் பித்தா பிறை சூடி, என்பதில் சூடி என்னும் சொல் சூடியவன் எனப் பொருள் தருதலை ஒப்பிட்டருளினர்கள். 'கீளார்' எனும் பாடலில் மெய்பூசி எனவரும் தொடரும் இத்தகையதே எனக் குறித்தருளினர்கள். அடுத்து 'ஆடி பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணை' என்றதொடரில் ஏகாரத்தைத் தேற்றேகாரமாகவும் கொள்ளலாம். பிரிநிலை ஏகாரமாகவும் கொள்ளலாம். இதனுக்கு எடுத்துக்காட்டாக "மற்றுப் பற்று எனக்கு இன்றிநின் திருப் பாதமே மனம் பற்றினேன்" எனவரும் சுந்தரர் தேவாரத் தொடரில் பாதமே எனவரும் ஏகாரத்தை எடுத்துக்காட்டாக்கிப் பிரிநிலைப் பொருள் தன்மையை விளக்கியமை சீரிய ஒப்பீடாக அமைந்தது. எனவே புகழ்த்துணை நாயனர் பொன்னடிக்கு அன்றிப் பிறவற்றில் மனம் வையாதவர் எனத் தெளிவுபடுத்தினர்கள்.

புகழ்த்துணையார் செருவிலிபுத்தூரில் தோன்றியவர். இத்தலம் தற்போது அரிவிற்கரைப்புத்தூர் என்றும் அழகார்புத்தூர் என்றும் வழங்குகின்றது. செருவிலி என்னும் சொல் போர் இல்லாதது என்னும் பொருளுடையது. பெயர்க்காரணம் மேலும் ஆராயத் தக்கது என அருளி, இத்தலம் கும்பகோணத்திற்குத் தெற்கே குடவாயில்செல்லும் சாலையில் 8 கி. மீ. தொலைவில் உள்ளது எனக் குறித்தருளினர்கள்.

செருவிலிபுத்தூரில் சிவவேதியர் திருக்குலத்தில் அவதரித்த புகழ்த்துணையார் சிவபெருமானுக்கு அகம்படிமைத் தொண்டு புரிந்தார். அகம்படிமைத் தொண்டு என்பது இறைவன் திருமேனி தீண்டுதல், திருமஞ்சனம் ஆட்டுதல், அலங்கரித்தல், நிவேதித்தல், பூசித்தல் முதலியன. இவர், சிவாகம நெறிப்படி இறைவனைப் பூசித்தவர்.

விதிமுறை வழுவாது புகழ்த்துணையார் இறைவனை வழிபட்டு வரும்நாளில் நாட்டில் பஞ்சம் தோன்றி நிலவியது. மக்கள் உணவின்றித் தவித்தனர். புகழ்த்துணையாரும் பஞ்சத்தால் நிலை குலைந்தார். எனினும் "எம்பெருமானை யான் விடுவேன் அல்லேன்" என இரவும் பகலும் பூசித்தார். இவர் இங்ஙனம் இரவும் பகலும் பூசித்த பான்மையை விளக்கியருளிய குருமணிகள் "அடிக்கே இரவும் பகலும் பிரியாது வணங்குவன்" என்ற அப்பர் தேவாரத் திருத்தொடரை இயைபு தோன்ற உணர்த்தி வரலாற்றைத் தொடர்ந்தார்கள்.

பலமலர்களாலும் குளிர்ந்த நீரினாலும் பஞ்சகாலத்தில் இரவும் பகலும் பூசித்தார் புகழ்த்துணையார். இங்ஙனம் ஒழுகும் நாளில்

ஒருநாள் சிவபிரானுக்குத் திருமஞ்சனம் ஆட்டும்போது மிக்க பசியினால் வருந்தினார். நிலை தளர்ந்தார். புனல் தாங்கும் குடம் தாங்கமாட்டாதவர் ஆனார். பெருமான் முன் சென்றார். கைத் தவறியது. குடம் திருமுடியின்மீது வீழ்ந்தது. நடுங்கினார்! சோர்ந்தார்! வீழ்ந்தார். அப்பொழுது இறையருள், புகழ்த்துணையாரைச் சிறுதுயில் கொள்ளவைத்தது. இப்பகுதியை விளக்கும்போது நமிநந்தியடிகள் வரலாற்றை ஒப்பிட்டார்கள். நமிநந்தியடிகளுக்குத் திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லாரும் சிவகணங்களே எனக்காட்டும்பொருட்டுப் பெருமான் சிறுதுயில்தோற்றுவித்தருளிய பான்மையை வரலாறு ஒப்பிட்டருளினார்கள்.

புகழ்த்துணையார் கனவில் இறைவன் எழுந்தருளினார். "இப் பஞ்சகாலம் தீரும் வரை இங்கு நாம் உமக்கு நாள்தோறும் ஒவ்வொரு காசு வைப்போம்" என்று அருளிச்செய்தார். புகழ்த்துணையார் துயில் உணர்ந்தார். பலிபீடத்தின்மீது ஒரு பொற்காசு வைக்கப்பெற்றிருந்தது. பசியினால் வாடியபோதும் இறைத்தொண்டு ஆற்றிய புகழ்த்துணையார் எடுத்துக்கொண்டார். இறைவன் நாள்தோறும் காசு நல்கினார். வசதியான நிலை உண்டாயிற்று. எனினும் பழமை மறவாது புகழ்த்துணை நாயனார் நித்தலும் நியமமாகத் தொண்டாற்றிப் பெருமான் திருவடி சார்ந்தார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாஞ்சியம், திருநரையூர் சித்தீச்சரம் வழிபட்டுத் திருஅரசிற்கரைப்புத்தூர் அணைந்து பாடிய பதிக ஆரும்பாடலில் புகழ்த்துணை நாயனார் வரலாற்றைச் சுருக்கமாகவும், தெளிவாகவும் விளக்கியுள்ளார். குருமணிகள், அருளுபதேசம் தொடங்குமுன் ஓதுவாமூர்த்திகளிடம் இப்பாடலைப் பாட ஆணையிட்டருளினார்கள். பின்னர் உபதேசத்தின்போது பாடல் விளக்கமும் அருளினார்கள்.

" அகத்தடிமை செய்யும் அந்தணன்தான்
அரிசிற் புனல் கொண்டுவந்து ஆட்டுகின்றான்
மிகத்தளர்வு எய்தி குடத்தையும் நும்
முடிமேல் விழுத்திட்டு நடுங்குதலும்
வகுத்து அவனுக்கு நித்தல் படியும்
வரும்என்று ஒருகாசினை நின்றதன்றி
புகழ்த்துணை கைப்புகச் செய்துவந்தீர்
பொழிலார் திருப்புத்தூர்ப் புனிதனீரே.

என்பது அத்திருப்பாடல். பாடலின் சிறப்பருளி வரலாற்றோடு இயைபுபடுத்தியருளினார்கள்.

இங்ஙனம் திருமுறைச் சான்றுடன் புகழ்த்துணை நாயனார் தொண்டு நெறியை விளக்கிய குருமணிகள் கோட்புலியார் வரலாற்றைத்தொடர்ந்தார்கள். கோட்புலியார் திருநாட்டியத்தான் குடியில் வேளாளர் மரபில் தோன்றியவர். சோழ மன்னரின் சேனைத் தலைவர். பகைவர்களை எதிர்த்துப் போரிட்டு வெற்றிகொள்வதில் புலி. அரசர்க்காகப் போரிட்டுத் தாம் பெறும் சிறந்த வளங்களை எல்லாம் சிவபெருமானின் திருக்கோயில்களில் திருவமுதுக்கு என ஆக்கினார். செந்நெல்லினை வாங்கி மலைபோலக்குவித்துச் சேமித்தார். திருவமுதுத் தொண்டினைக்குறைவற நெடுங்காலம் செய்துவந்தார்.

இங்ஙனம் திருத்தொண்டு ஆற்றிவரும்போது ஒருமுறை போர்முனைக்குச் செல்ல நேர்ந்தது. சென்று திரும்பும் வரை தேவையான நெல்லினை நெற்கூடு அமைத்தார். போருக்குச் செல்லும் முன் தம் சுற்றத்தாரை அழைத்தார். சிவபெருமானுடைய அமுதுபடிக்காக உள்ள இந்நெல்லை-நெற்கூடுகளை அழிக்க மனத்தினாலும் நினையாதீர். திருவிரையாக்கலி என்று சிவனது ஆணையைவணக்கத்துடன் கூறிப் போர் மேற்சென்றார்.

திருவிரையாக்கலி என்னும் தொடர் திருவருள் ஆணை - சிவன், ஆணை என்னும் பொருள் கொண்ட சொல். "பொய்தீர் விரையாக் கலி எனும் ஆணையும்" என்பது கோயில் நான்மணிமாலைத்தொடர். அதாவது திருவாம் சிவன் மீது ஆணையாக இந்நெல்லை தொட மனத்தினாலும் எண்ணாதீர்கள் என உறவினர்க்கு உணர்த்திச் சென்றார் கோட்புலியார் - என விளக்கம் அருளிப் புராணத்தைத் தொடர்ந்தார்கள்.

கோட்புலி நாயனார் போர்முனை சென்றார். சிறிது காலம் சென்றது. நாட்டில் பஞ்சம் வந்தது. கோட்புலியாரின் உறவினர் உணவின்றித் தவித்தனர். "உணவின்றி இறப்பதனைக்காட்டிலும் இறைவர்க்கு எனவைத்த செந்நெல் கொண்டு உண்டு வாழ்வோம்; பஞ்சம் நீங்கியபின் திரும்பக்கொடுத்து விடுவோம்" எனக்கருதினர். கோட்புலியார் சேமித்து வைத்த நெற்கூட்டினின்று நெல் எடுத்துப் பயன் படுத்தினர்.

கோட்புலியார் போர் முனையில் வெற்றி கொண்டு மீண்டார். அரசனிடத்து நிதிக்குவை முதலியன பெற்றுத் திரும்பினார். அதுபோது சுற்றத்தார் செய்த பிழையினை அறியலுற்றார். தாம் சுற்றத்தார் செய்த பிழையைத் தெரிந்துகொண்டமையைப் புலப்படுத்தாதவரானார். பிழை செய்த சுற்றத்தார் அனைவரையும் அழிக்கத் திருவுளம்பூண்டார். தம்மை எதிர்கொண்ட சுற்றத்தாரை

யெல்லாம் இன்மொழி கூறி, தம் திருமாளிகைக்கு வருமாறு அழைத்தார். பைந்துகிலும் நிதியமும் தருவதாகக் கூறினர்.

சுற்றத்தார் அனைவரும் கோட்புலியார் திருமாளிகைசேர்ந்தனர். பெருநிதியம் கொடுப்பார்போலக் காட்டினர். தம் பெயருடைய கோட்புலி என்னும் காவலாளனை வாயில்காக்கச் செய்தார். இறை ஆணையையும் மறுத்துத் திருஅமுதுக்கென வைத்த நெல்லையுண்ட கிளைஞரை எண்ணிச் சினந்தார். ஒவ்வொருவராக அழைத்துத் தீவினையின் பயனை நீக்கும் பொருட்டுத் தமது வாளினைக்கொண்டு துணித்தார். அனைவரும் மாண்டனர்.

காவலாளன் இறுதியாக உள்ளேவந்தான். "ஓர் ஆண்குழந்தை மட்டுமே பிழைத்து, வாயிலில் உள்ளது. இக்குழந்தைக்கு இன்னம் அன்னம் உண்பிக்கவில்லை; அன்னப்பிராசனம்கூட ஆகவில்லை. எனவே வெட்டாது அருள்புரியும்" என்றான். "குழந்தை அன்னம் உண்டிலதாயினும் இந்நெல் உண்டாள் முலைப்பால் உண்டது" எனக் கூறி அதனை எடுத்து மேலே வீசி வாளினால் எறிந்தார். இரு துண்டு ஆயிற்று - அப்போது பெருமான் வெளிப்பட்டு அருள் செய்தார்.

" அந்நிலையே அன்பர் எதிர் வெளியே நின்று
உன்னுடைய கைவாளால் உறுபாசம் அறுத்தகிளை
பொன்னுலகின் மேலுலகம் புக்கணையப் புகழோய்நீ
இந்நிலைநம் முடன்அணைக என்றேவி எழுந்தருளினர் "

எனச் சேக்கிழார் இறைவன் வெளிப்பட்டருளிய திருக்காட்சியை விளக்கினர்.

கோட்புலியார் செயலின் உள்நோக்கம் உறவினரை அழிப்பதன்று. உறவினர்செய்த பாவத்தினை அறுத்த செயல்; அவர்களைத் தண்டிக்காதுவிடுவதுதான் பாவம். சிவாபராதம் செய்தாரைத் தண்டிக்காமல் விட்டால் பாவகாரியத்துக்குத் துணைபோவதாக அமையும் என விளக்கினர்கள். மேலும் இறைவனுக்குரிய திருவமுதுபடியை உண்டால் ஆயுட்குறைவு ஏற்படும் என்பது இவ்வரலாற்றின் மூலம் அறியத்தக்க நீதி என்பதையும் உணர்த்தியருளினர்கள். தொடர்ந்து கோட்புலியார் புராணத்தில் கூறுமல் ஏயர்கோன்கலிக்காமர் வரலாற்றில் சேக்கிழார் பதிவு செய்தருளிய வரலாற்றுக் குறிப்பையும் புராணத்தின் இடையேபுலப்படுத்தினர்கள்.

சுந்தரர் திருநாட்டியத்தான்குடிக்கு எழுந்தருள வேண்டி அழைத்து ஊர் முழுதும் அலங்கரித்து வரவேற்றார் கோட்புலியார். தம் திருமாளிகைக்கு எழுந்தருளச் செய்து போற்றினார். நட்புரிமை பூண்டு திருவமுது செய்வித்தார். சிங்கடியார், வனப்பகையார் என்ற தம் புதல்வியரை அழைத்து நம்பிகள் திருவடி வணங்கச் செய்தார். தாமும் வணங்கினார். சுந்தரரை நோக்கி இவர்களை இருவரையும் அடிமைகளாக ஏற்றருள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். சுந்தரர் இவர்கள் என்னுடைய மக்களேயாவர் எனக் கூறித்தம் திருத்தொடை இருத்தி, உச்சிமோந்தார். பின்னர் திருநாட்டியத்தான்குடித் திருக்கோயில்சார்ந்தார். 'பூணாண் ஆவது ஓர் அரவம்' எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடினார். அத்திருப் பதிகத்தில் கோட்புலியாரைச் சிறப்பித்துப்பாடினார். கடைக்காப்புச் செய்யுளில் தம்மைச் சிங்கடியப்பன் எனக் குறித்துக் காட்டி யுள்ளார்.

'' கூடா மன்னரைக் கூட்டத்து வென்ற
கொடிறன் கோட்புலி சென்னி
நாடார் தொல்புகழ் நாட்டியத் தான்குடி
நம்பியை நாளும் மறவாச்
சேடார் பூங்குழல் சிங்கடி யப்பன்
திருவா ரூரன் உரைத்த
பாடீ ராகிலும் பாடுமின் தொண்டீர்
பாடநும் பாவப்பற் றறுமே ''

என்பது அத்திருப்பாடல்.

இங்ஙனம் திருமுறைச் சான்றுகளுடன் நாயன்மார் வரலாறு களைத் தத்துவச் செறிவோடு விளக்கி நிறைவு செய்தார்கள். இன் சுவைத் தீங்கனிச்சாறு பண்டாரக் கட்டின் வாயிலில் அளிக்கப் பட்டது. இனிய சிந்தனைகளை ஏந்தி இல்லம் ஏகினோம்.

கோட்புலியார் புராணத்தைக் கொள்கைவழி விளக்கிநமை
ஆட்கொள்ளும் குருமணிதாள் அகம்குழைந்துவணங்கிடுவோம்.

வாழ்க குருமணிகள் !

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆயில்ய வழிபாடு

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளில் தேவார வைப்புத் தலங்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றுவருகின்றன. சுக்கில ஆண்டு பங்குனித்திங்கள் ஆயில்ய வழிபாடு 5—4—1990 வியாழக்கிழமை அன்று காலை 10 மணிக்குக் கீழ்வேளூருக்கு அருகில் உள்ளதும் தேவார வைப்புத் தலமும் ஆகிய ஆழியூர் ஸ்ரீ கங்காளநாதசுவாமி கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பு வழிபாடு நடைபெற்றது.

தருமை ஆதீனக் கலைக் கல்லூரி நாட்டுநலப் பணித்திட்ட மாணவர்களால் உழவாரப்பணி செய்யப்பெற்றது. தருமை ஆதீனப் புலவர் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., சொற்பொழிவாற்றினர். அன்பர்கள் தரிசித்தும் சொற்பொழிவு கேட்டும் பயன்பெற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமை ஆதீனத் திருமடத்தில் ஆங்கிலமாத முதல் ஞாயிற்றுக் கிழமைதோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை அன்பர்கள் வழிபட்டு அருளுபதேசம்பெறும் பிரார்த்தனைக்கூட்டம் 1—4—1990 அன்று மாலை 4 மணியளவில் தொடங்கித் திருமுறைப் பாராயணம் முதலிய அங்கங்களுடன் சிறப்பாக நடைபெற்றது.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் திருத்தொண்டர் புராணச் சிந்தனை அருளும் வகையில் பத்தராய்ப் பணிவார்கள், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் ஆகிய தொகை அடியார் பெருமைகளையும் பக்தியையும் விளக்கியருளினர்கள். ஆதீன அடியார்கள், அன்பர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

அடுத்து 106 ஆவது அருளுபதேசம் 6—5—1990 அன்று நடைபெறும். அன்பர்கள் கலந்துகொண்டு பயன்பெறுவார்களாக.

வசந்த நவராத்திரிவிழா

தருமை ஆதீனம் ஸ்ரீ ஆனந்தபரவசர்பூங்காவில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி அருள் வழங்கும் ஸ்ரீ வனதுர்க்காதேவிக்கு வசந்த நவராத்திரி விழா 27—3—90 செவ்வாய்க்கிழமையன்று தொடங்கிச் சிறப்பாக நடைபெற்றது இந்நாளில் ஸ்ரீ வனதுர்க்கா தேவிக்கு உலக நலன் கருதி விசேஷ அபிஷேக ஆராதனைகளும்

நவசக்தி அர்ச்சனைமூலம் லட்சார்ச்சனையும் சப்தசதி, மகாமந்திர அர்ச்சனையும் நிகழ்த்தப்பெற்றன. 3—4—90 செவ்வாய்க்கிழமை அன்று சப்தசதி பூஜாஹோமமும் இரவு லட்சார்ச்சனையும் நிகழ்வுற்றன. தேவியின் சந்நிதியில் தேவிமகாத்மியம், அபிராமி அந்தாதி பாராயணங்கள் நடைபெற்றன. இந்நாட்களில் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடு ஆற்றி அன்பர்கட்கு அருள்பிரசாதம் வழங்கினார்கள். பக்தர்கள் பலர் வழிபாட்டில் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

பங்குனித்திங்கட் பெருவிழா

வேளூரில் :

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்திய நாதசுவாமி தேவஸ்தானத்தில் 30—3—90 வெள்ளிக்கிழமை தொடங்கிப் பத்துநாட்கள் பங்குனி உத்திரப் பெருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. கொடியேற்றம், சகோபுரக்காட்சி, திருத்தேர்விழா, தீர்த்தவிழா ஆகியவை சிறப்புத் திருநாட்களாகக் கொண்டாடப்பெற்றன. விழாவின் ஒட்டிச் சமய சொற்பொழிவுகள் நடைபெற்றன. 31—3—90 சனிக்கிழமை வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம். ஏ., பி. எட்., அவர்கள் மூவர் தேவாரம் பற்றியும், 1—4—90 ஞாயிற்றுக்கிழமை வித்துவான் திரு. வி.சா. குருசாமி தேசிகர் எம். ஏ., திருவாசகம் பற்றியும் உரையாற்றினர். 2—4—90 திங்கட்கிழமை திருமுறை விழாவும் தேவார வகுப்பு ஆண்டு விழாவும் நிகழ்வுற்றது. திரு. சாமி. கிருஷ்ணமூர்த்தி, எம். ஏ., திருவிசைப்பா திருப்பல்லாண்டு பற்றி உரையாற்றினர். 3—4—90 செவ்வாய்க்கிழமை வித்துவான் திருமதி. ப. நீலா, எம். ஏ., எம்.ஃபில்., திருமந்திரம் பற்றியும், 4—4—90 புதன்கிழமை டாக்டர் திரு. மு. சிவச்சந்திரன், எம். ஏ., பி. எட்., பிஎச். டி., பதினோராம் திருமுறை பற்றியும், 5—4—90 வியாழக்கிழமை வித்துவான் திரு. வை. முருகையா தேசிகர் திருத்தொண்டர் புராணம் பற்றியும் உரையாற்றினர். திருமுறை திருநாளில் பண்ணிசை வாணர்களின் திருமுறைப் பாராயணத்துடன் திருமுறைகள் யானைமேல் திருவீதி வுலா நடைபெற்றது. அன்பர்கள் பலர் தரிசனம் செய்தும் கேட்டும் பயன்பெற்றனர்.

திருபுவனத்தில் :

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீகம்பகரே சுவரசுவாமி தேவஸ்தானத்தில் 30—3—90 வெள்ளிக்கிழமை தொடங்கிப் பத்து நாட்கள் பங்குனிப் உத்திரப் பெருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. கொடியேற்றம், தன்னைத்தான் அர்ச்சித்தல், சகோபுரக்காட்சி, திருக்கல்யாண விழா, திருத்தேர் விழா ஆகிய சிறப்பு விழா நாட்களில் பெருந்திரளாக பக்தர்கள்

சுவாமி தரிசனம் செய்து பயன் பெற்றனர். விழா நாட்களில் 31—3—90 சனிக்கிழமையன்று பேராசிரியர் திரு. சாமி. கிருஷ்ணமூர்த்தி, எம். ஏ., திருஞானசம்பந்தர் பற்றியும், 1—4—90 ஞாயிற்றுக்கிழமை பேராசிரியர் திரு இரா. மருதநாயகம், எம். ஏ., எம். ஃபில்., திருநாவுக்கரசர் பற்றியும், 2—4—90 திங்கட்கிழமை டாக்டர் திரு. இரா. செல்வக்கணபதி, எம். ஏ., பி. எட்., பிஎச். டி., சுந்தரமூர்த்தி சுவாமிகள் பற்றியும் உரையாற்றினர். 3—4—90 செவ்வாய்க்கிழமை திருமுறைவிழாவும் தேவாரவகுப்பு ஆண்டுவிழாவும் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பரிசுகள் வழங்கி மூவர் தேவாரம் என்பது பற்றிப் பேசினர்கள். 4—4—90 புதன்கிழமை வித்துவான் திருமதி. ப. நீலா, எம். ஏ., எம். ஃபில், மாணிக்கவாசகர் பற்றியும் 5—4—90 வியாழக்கிழமை டாக்டர் திரு. மு. சிவச்சந்திரன், எம்.ஏ., பி. எட், பிஎச். டி., சேக்கிழார் பற்றியும் பேசினர்கள்.

பங்குனி உத்திரப்பெருவிழா

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான பேரளம் ஸ்ரீ சுயம்புநாத சுவாமி தேவஸ்தானத்தில் உத்திரபாதத்தீர்த்தத் திருநாள் 8—4—90 ஞாயிற்றுக்கிழமையன்று ஏகதின உற்சவமாக மிகச் சிறப்பாக நடைபெற்றது. அன்று காலை பஞ்சமூர்த்திகளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் அக்னிபுஷ்கரணி தீர்த்தத்தில் தீர்த்தம் கொடுத்தருளலும் இரவு திருவீதியுலாவும் நிகழ்வுற்றன. மாலை 7 மணியளவில் தருமை ஆதீனக் கலைக்கல்லூரிப் பேராசிரியை வித்துவான் திருமதி. ப. நீலா, எம். ஏ., எம். ஃபில்., மீனாட்சி திருமணம் பற்றி விரிவுரை ஆற்றினர். அன்பர்கள் சுவாமி தரிசனம் செய்தும் சொற்பொழிவைக் கேட்டும் பயன்பெற்றனர்.

திருமுறை வேள்வி விழா

சிவபெருமானுக்கு மிக உயர்ந்ததும் ஸ்ரீ திருஞானசம்பந்தர் திருவவதாரம் செய்தருளியதும் பன்னிரு திருமுறைகளில் முதல் தேவாரத் திருப்பாடலாகிய "தோடுடைய செவியன்" தோன்றியதும் திருத்தொண்டர் புராணம் அரங்கேற்றம் செய்தருளியதும் ஆகிய திருவாதிரைத் திருநாளில் மூன்றும் திருமுறை முற்றோதல் 2—4—90 திங்கட்கிழமை காலை 9 மணிக்குத் தொடங்கி மாலை 7 மணிவரை ஸ்ரீ திருஞானசம்பந்தர் சிவசோதியில் கலந்தருளிய தலமாகிய ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத்தியாகராஜசுவாமி சந்நிதியில் நடைபெற்றது.

திருமுறை ஓதுவார்களும் புலவர்களும் திருமுறை ஓதினர். ஆச்சாள்புரம் பெருமக்களும் தாய்மார்களும் செவிமடுத்துக்கேட்டுய்ந்தனர். மாலை 7மணி அளவில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றி ஆசியுரை வழங்கி மூன்றும் திருமுறை முற்றோதலை நிறைவு செய்தருளினர்கள்.

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஓய்வுபெற்ற ஆசிரியர்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(பிரமோதூத ஹூ சித்திரை மீ 1வ முதல் 31வ முடிய)

(14—4—1990 முதல் 14—5—1990 முடிய)

கலியுகம் 5091 பிரமோதூத ஹூ கலிசுத்தநினம் 1859529 நாள் 47 நாழிகை 42 விநுடி 30 தற்பறை இவைத 7 ஆல் வகுக்கவந்த மீதி சுக்கிராதி தினங்கள் தள்ளியதில் முதல் தினத்தில் 47 நாழிகை தற்பறை நீங்கலாக 42 விநுடிக்கு அனுஷ நக்ஷத்திரம் மகர லக்கினத்தில் ஸ்ரீ உலகரட்சகரான சூரிய பகவான் மீன ராசியி னின்றும் மேஷராசி சங்கிரமணமாக சௌரமான பிரமோதூத வருஷ சித்திரை மாதப் பிரவேசம் செய்தருளுகின்றார். அன்று 47 நாழி கைக்கு மேல் மாத சங்கிரமணமானதால் மறுதினம் சனிக்கிழமை வாராதிபதியாகிய சனிபகவானே கலியுகம் 5091 பிரமோதூத வருஷத்திற்கு மந்திரியாகவருகிறார். அவர்வானமண்டலத்திலிருந்து பூலோகத்திற்கு நன்மை செய்பவராக விளங்குகிறார்.

நவ நாயகர்கள்

இராஜா செவ்வாய், மந்திரி சனி, சேனாதிபதி சுக்கிரன், சஸ்யாதிபதி சந்திரன், இரஸாதிபதி புதன், நீரஸாதிபதி சந்திரன், தானியாதிபதி சூரியன், அர்க்காதிபதி சுக்கிரன், மேகாதிபதி சுக்கிரன். இவர்கள்விண்ணிலிருந்து இப்பூலோகத்தை இரட்சிப்பவர் களாக இவ்வாண்டில் திகழ்கின்றார்கள்.

இராஜா செவ்வாய் பகவான், மந்திரி சனிபகவான் ஆனதால் உலகில் அதர்மம் செய்வோர், வன்முறை செய்வோர், மிரட்டுவோர் கடத்தல் செய்வோர் தண்டிக்கப்படுவர். தீயன விலகும். நாடுகளில் கொந்தளிப்பாக நிகழும்பூசல்கள் நீங்கும். துஷ்டருக்கு சிஷ்ட பரிபாலனம் ஆகும். தேசங்களில் அரசு பரிபாலன செயலகங்களில் செயல் புரிவோரின் கடமைப்பணி துரிதமாகி நல்லன ஏற்படும். இவ்விதம் உலகம்செவ்வையுறும். இறைவன் கருணைகடாட்சத்தினால் நவநாயகர்களில் மற்றவர்கள் சுபர்களாக வந்துள்ளார்கள். அதனால் உலகில் நல்ல மழைபெய்து நீர்வளம், நிலவளம் மிகுந்து சஸ்ய பொருள்களின் உற்பத்தி பெருகிவரும். பசு விருத்தி, பால் விருத்தி

ஏற்பட்டு மக்கள் சுபிட்சமாக உய்வர். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் பரமஞானிகளாக வந்து திருவீற்றுள்ள சிவஞானகுருமகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள் ஜெகத்குரு மகான்கள் இவ்வுலகம் தெய்வநெறியில் திழும் பொருட்டு இப்புத்தாண்டின்படியில் பெருமானோடு பதிவுறத் தம் திருவாய் மலர்ந்து இறைவன் திருவருள் உயர் தத்துவ ஞானம் விமர்சனம் செய்தருள்வார்கள். திருச்சபையில் கூடிய பக்த கோடிகள், சிஷ்ய கோடிகள் அரசபிரமுகர்களுக்கு ஈஸ்வரனை தியானித்துத் தம் திருக்கரங்களால் மகாபிரசாதம் வழங்கிச் சீரிய வழியில் உயர ஆசீர்வதிப்பார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் வழி வழி வந்து உலகப் பொதுமறை வழுவாது பொதுநலத் தொண்டாக இறைவனை அர்ச்சிக்கின்ற புனித சிவாசார குருக்கள்மார்களால் பூர்வ நியம விதியின்படி நித்தியம் ஆறுகால பூசைகள் விசேஷ பூசைகள் நடைபெற்றுவரும். அறம் காக்கும் ஆலய நிர்வாக புண்ணியவான்களின் சீரிய தொண்டில் உற்சவங்கள், சுவாமி புறப்பாடு பஞ்சமூர்த்திகளின் வீதியுலாக்காட்சி வேதபாராயணம், கீதவாத்தியம் முழங்கச் சிறப்பாக நடைபெறும். ஈஸ்வர சிந்தனையாகச் சொற்பொழிவுகள் கதாகாலட்சேபங்கள் நடந்து எல்லா பிரஜைகளும் ஈஸ்வரபக்தியில் திளைப்பார்கள்.

1 மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷ ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பண வருமானம் வெகுவாக வந்து நிறையும். வித்துவத்துவம் கலைத்துறையில் அரசாங்க கௌரவம் தரும். செய்தொழிலில் அபிவிருத்தி உத்தியோகத்தில் உயர் ஸ்திதி ஏற்படும். எல்லாக் காரியங்களும் பெருமதிப்பில் திட்டமிட்டபடி நடந்தேறும். ஏப்ரல் 29ல் தெய்வ கைங்கர்யம் பரோபகாரம் ஒன்றில் இலட்சிய நோக்கில் செலவு ஏற்கும். ஸ்திரி புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். ஏப்ரல் 14, 15 மே 11, 12 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

பிரமோதூதனுக்கு இராசி ஆதாயம் 8, விரயம் 14, ஆரோக்கியம் 2, அநாரோக்கியம் 3, இராஜபூஜிதம் 5, இராஜகோபம் 6, சுகம் 6, துக்கம் 3.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீரிஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் நிரம்ப வந்து கொண்டிருக்கும். அரச ஊண்யம், புத்திர சௌக்கியம், தொழில் அபிவிருத்தி ஆகியவற்றில் செலவினமும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். ஏப்ரல் 29 தேதி முதல் எல்லாபிர

விருத்தியிலும் நற்பலனை ஏற்படுத்தித்தரும். ஆபரணபிராப்திநவின பொருள் பிராப்தியளிக்கும். தாம்பத்திய வாழ்க்கை இல்லற தர்மத்துடன் தெய்வ பக்தியில் நடந்து வரும். ஏப்ரல் 16, 17 மே 13, 14 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

பிரமோதூத ஷு இராசி ஆதாயம் 2, விரயம் 8, ஆரோக்கியம் 6, அநாரோக்கியம் 4, இராஜபூஜிதம். 4, இராஜவோபம் 2, சுகம்6, துக்கம் 3.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் கண்யஸ்திதிக்கு ஏற்ப வந்துகொண்டிருக்கும். வித்து வத்துவம், கலைத்துறையில், செய்தொழில் உத்தியோகத்தில் அரசாங்க நன்மை ஏற்பட்டு உயர்வளிக்கும். ஓர் நூதன பொருள் பிராப்தியளிக்கும். சகோதரர் புத்திரர் புத்திரிகளுக்கு சுபம்ஏற்படும். எல்லா முயற்சித்த காரியங்களும் தெய்வ பலனில் நல்லவிதத்தில் நடந்தேறும். தாம்பத்திய வாழ்க்கை சாஸ்திரோக்த ஆசார நல் வழியில் தெய்வபக்தியாக நடந்து வரும். ஏப்ரல் 18, 19 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

பிரமோதூத ஷு இராசி ஆதாயம் 5, விரயம் 5, ஆரோக்கியம் 1, அநாரோக்கியம் 1, இராஜபூஜிதம் 4, இராஜ வோபம் 2, சுகம்6, துக்கம் 3.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடக ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் அரச கண்யத்தில் வந்துகொண்டிருக்கும். வித்து வத்துவம், கலைத்துறையில் சிறப்பளிக்கும். அரசாங்கத்தில் உயர் பதவி தரும். புத்தி சாதுரிய செயல்களில் நற்பெயர் வரும். ஆய்வுத் துறையில் புதுமை காணுதல் ஆகும். ஏப்ரல் 29 தேதியிலிருந்து கட்டிட வாகனதிகளில் புதிய கட்டமைப்பு, சுப நிகழ்ச்சிகள் நிர் மானித்தபடி இனிது நடக்கும். தாரம்புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். ஏப்ரல் 20, 21 தேதிகள் சந்திராஷ்டமம், செவ்வாய், புதன் சுபம்.

பிரமோதூதஷு இராசி ஆதாயம் 5, விரயம் 11, ஆரோக்கியம் 5, அநாரோக்கியம் 1, இராஜபூஜிதம் 2, இராஜவோபம் 6, சுகம் 3. துக்கம் 3.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்ம ராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பண வருமானம் நல்ல வகையில் வரவாகும். வித்துவத்துவம் கலைத்துறையில் அனுபவ செயல் முறைகளில் மதிப்பு உயரும். முக்கியகாரியங்களுக்குப் பொறுப்புவகித்தல் ஆகும். ஏப்ரல் 29 தேதியிலிருந்து மன உறுதி கிரியா மேன்மை நல்லன ஏற்படுதல் ஆகும். ஆசார அனுஷ்டான நெறிமுறை அனுஷ்டித்துவருதல் ஆகும். ஏப்ரல் 22, 23, 24 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

பிரமோதூதவூ இராசி ஆதாயம் 2. விரயம் 14, ஆரோக்கியம் 3, அநாரோக்கியம் 7, இராஜபூஜிதம் 5, இராஜகோபம் 6, சுகம் 3, துக்கம் 3.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியா ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும். பண வருமானம் கெடியான தோரணைக்குஏற்ப வந்துகொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத்துறையில் செய்தொழில் உத்தியோகத்தில் பிரசித்தமும் உயர்வும் ஏற்படும். ஏப்ரல 29 தேதியில் நல்ல காரியம், வரவேண்டிய பொருள் வந்து சேருதல் ஆகும். எல்லாக் காரியங்களையும் அரச கெடியில் சிறப்பாக நடத்தச் செய்யும். தாரம்புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். ஏப்ரல் 25, 26 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

பிரமோதூத வூ இராசி ஆதாயம் 5, விரயம் 5, ஆரோக்கியம் 1, அநாரோக்கியம் 1, இராஜபூஜிதம் 4, இராஜகோபம் 2, சுகம் 6, துக்கம் 3.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

துலா ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். வித்தியா வியாபாராதி கலைத் துறையில் ஒப்பந்தங்களில் நற்பலன் தரும். இருப்பிடம் மாற்றம் அல்லது தாயாருக்குத் தேக நலிவு ஏற்பட்டு குணமாகும். ஸ்ரீ துர்க்காம்பிகைக்கு அருச்சனை செய்ய நல்ல சௌகரியங்கள் ஏற்படும். புத்திரர் பௌத்திரர்களுக்கு மேன்மை ஸ்திதியளிக்கும். தாம்பத்திய வாழ்வில் சொகுசும் உல்லாசமும் ஏற்படும். ஏப்ரல் 27, 28 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

பிரமோதூத வூ இராசி ஆதாயம் 2, விரயம் 8, ஆரோக்கியம் 6, அநாரோக்கியம் 4, இராஜ பூஜிதம் 4, இராஜகோபம் 2, சுகம் 6, துக்கம் 3.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை

விருச்சிக ராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பணவருமானம் வந்துகொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத்துறையில் அரசாங்க கௌரவம் தரும். எல்லாக் காரியங்களையும் மதிநுட்பத்தில் வெற்றியாக நடத்தச் செய்யும். பரோபகார நற்செயல்களில் ஈடுபாடு ஆகும். அன்புக்குரியவர் ஒருவரின் மனக்குறைவரினும் குரு வீட்சண்யத்தினால் பிகுவுத் தன்மை நீங்கிச் சமயத்தில் அனுகூலம் செய்வர். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். ஏப்ரல் 29, 30 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

பிரமோதூத ஸு இராசி ஆதாயம் 8, விரயம் 14, ஆரோக்கியம் 2, அநாரோக்கியம் 3, இராஜ பூஜிதம் 5, இராஜகோபம் 6, சுகம் 6, துக்கம் 3.

9. தனுசு -: மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர் ராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பணவருமானம் அதிகம் தரும். அதற்கேற்ப சுப செலவும் ஏற்படும். பொன்மணிகள் ஆபரண பிராப்தியளிக்கும். ஏப்ரல் 29 தேதியிலிருந்து பசுபால் பிராப்தியில் விருத்தியும், வீடு வசதியில் நவீனம் பொருந்துதலும் ஆகும். பூமி பிராப்தி சகோதரர் அனுசரணை ஏற்படுதலின்றும் மனதில் மகிழ்ச்சி ஏற்படும். தாரம் புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். மே 1, 2 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

பிரமோதூத ஸு இராசி ஆதாயம் 11, விரயம் 5, ஆரோக்கியம் 7, அநாரோக்கியம் 4, இராஜ பூஜிதம் 4, இராஜகோபம் 2, சுகம் 6, துக்கம் 3.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகர ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் தெடியான தோரணைக்கு ஏற்ப வரவாகும். உறுதி வாக்களிக்கும். ஏப்ரல் 29 தேதியில் ஓர் ஆபரணம் தரும். புத்திரிக்கு சுபம் தரும். வித்துவத்துவம் கலைத்துறையில் அரசாங்கக் கடித தொடர்புகளில் நல்லன ஏற்பட்டுவரும். கம்பியூட்டர் அல்லது நூதன பொருள் அனுபோக பிராப்தியாகும். தாரம் புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். மே 3, 4, 5 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

பிரமோதூதஹு இராசி ஆதாயம் 14, விரயம் 14, ஆரோக்கியம் 1, அநாரோக்கியம் 6, இராஜ பூஜிதம் 5, இராஜகோபம் 6, சுகம் 3, துக்கம் 3.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

கும்ப ராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பணவருமானம் கன்ய ஸ்திதிக்கு ஏற்ப வந்துகொண்டிருக்கும். வித்தியா வியாபார ராதி கலைத்துறையில் விசேஷ நற்பலன் வரும். நல்ல ஆபரணம் தரும். வீடு வாகனங்களில் நல்ல சௌகரியம் இருந்துவரும். ஏப்ரல் 29 தேதியில் திரண்ட பொருள் கைக்கு வரும். புத்திரர்களின் கல்வி கலைகளில் உயர் ஸ்திதியாகும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வ பக்தியில் தான தர்மத்துடன் நடந்து வரும். மே 6, 7 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

பிரமோதூதஹு இராசி ஆதாயம் 14, விரயம் 14, ஆரோக்கியம் 1, அநாரோக்கியம் 6, இராஜ பூஜிதம் 5, இராஜகோபம் 6, சுகம் 3, துக்கம் 3.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

மீன ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். பண வருமானம் வரும். சகோதரம் ஸ்திரி வழியினரில் கலகௌரவத்தில் நல்லசெலவினமும் ஏற்தும். அரசுலிகித வருதல், வெளியிடத்திற்கு அழைப்பு வருதல் ஆகும். எல்லா நெருக்கடி பிரச்சினைகளிலும் தெய்வபலன் முன்னின்று காக்கும். சான்றோரால் அனுகூலங்கள் ஏற்படுதல் ஆகும். புத்திரஹத்திசம்பவம் காணும். வயிற்றில் நலிவு ஏற்பட்டுக் குணமாகும். ஏப்ரல் 29 தேதி முதல் சௌகரியங்கள் மன ஆறுதல் ஏற்படும். மே 8, 9 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

பிரமோதூதஹு இராசி ஆதாயம் 11, விரயம் 5, ஆரோக்கியம் 7, அநாரோக்கியம் 4, இராஜபூஜிதம் 4, இராஜகோபம் 2, சுகம் 6, துக்கம் 3.

குருபாதம்

தருமை ஆதீனம்

ஸ்ரீ ஞானம்பிகை உடனுகிய ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயில் பெருவிழா

தருமை ஆதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழா

சிறப்புத் திருநாள் விபரம்

(பக்க நிரலில் செங்குத்தாக: வைகாசி ஸ்ரீ பிரமோதூத ஆண்டு சித்திரை ஸ்ரீ)

தமிழ்த் தேதி	ஆங்கிலத் தேதி	கிழமை	சிறப்புத் திருநாள்
23	6—5—90	ஞாயிறு	கொடியேற்றம்
27	10—5—90	வியாழன்	சகோபுர ரிஷபவாகனக்காட்சி
29	12—5—90	சனி	திருக்கல்யாண விழா
31	14—5—90	திங்கள்	திருத்தேர்
1	15—5—90	செவ்வாய்	ஸ்ரீலஸ்ரீ ஆதி குருஞானசம்பந்தர் குருபூசை விழா, மாகேசுவர பூசை
2	16—5—90	புதன்	காலை : சிவபூசை நண்பகல் : மாகேசுவர பூசை இரவு : தருமை ஆதீனம் இருபத்தாருவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பட்டினப்பிரவேசம்.

விழா நாட்களில் காலை மாலை ஆகிய இருவேளைகளிலும் திருவீதியுலாக் காட்சியும், மாலை ஆதீனத் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் விரிவுரைகளும் நடைபெறும். திருவீதியுலாவின் போது வேத பாராயணமும் திருமுறைப் பாராயணமும் நிகழும்.

பக்தர்கள் விழாவில் கலந்துகொண்டு திருவருளும் குருவருளும் பெற்று உய்வார்களாக.

சித்திரைமாதச் சிறப்பு நாட்கள்

14—4—90 சனி, தமிழ் வருடப் பிறப்பு, வேளூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமிக்குச் சீதளகும்பம் ஆரம்பம். சீகாழியில் ஸ்ரீ உமா மகேசுவரருக்கு உச்சிக்காலத்தில் புழுகாப்பு. திருக்கடவூர் ஸ்ரீ காலசம்ஹாரமூர்த்திக்கும், திருக்குறுக்கை ஸ்ரீ வீரட்டேசுவர சுவாமிக்கும் அபிஷேகம். புதுப்பஞ்சாங்கம் வாசித்தல். தில்லைவாழ்ந்தணர் நாயனார் குருபூஜை.

18—5—90 புதன், திருக்குறுக்கை, திருக்கடவூர் சம்வத்ஸராபிஷேகம்.

19—4—90 வியாழன், ஸ்ரீ நடராஜர் அபிஷேகம். தொண்டைமண்டல ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் திருமடம் குருமுதல்வர் குருபூஜை. சித்தர்க்காடு காழிச் சிற்றம்பலநாடிகள் குருபூஜை

20—4—90 வெள்ளி, சித்திரை சதயம். ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூசை.

26—4—90 வியாழன், கிருத்திகை விரதம், தருமை ஸ்ரீ சண்முகர் அபிஷேகம். மங்கையர்க்கரசியார் குருபூசை.

27—4—90 வெள்ளி, கிருத்திகை, அக்ஷயதிருதியை, சூரியனார்கோவில் ஆதி சிவாக்கிரயோகிகள் குருபூஜை.

28—4—90 சனி, விறன்மிண்டர் நாயனார் குருபூசை.

29—4—90 ஞாயிறு, சீகாழி, திருக்கடவூர், திருப்பனந்தாள், திருச்சி முதலிய தலங்களில் சைத்ரோத்ஸவ ஆரம்பம்.

30—4—90 திங்கள், சஷ்டி விரதம், சீகாழி திருமுலைப்பால் உற்சவம்.

2—5—90 புதன், ஆயில்ய விழா, தருமை ஆதீனம் இருபத்தாறுவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஜன்ம நக்ஷத்திர விழா,

3—5—90 வியாழன், திருவையாறு ஆத்மபூஜை, திருச்சி ஸ்ரீ மாத்ருபூதேசுவரர், ரத்னாவதிக்குத் தாயாக வருதல். திருக்கடவூர் ஸ்ரீ காலசம்காரமூர்த்திக்கு அபிஷேகம் சித்திரைப் பெருவிழாவில் சகோபுர ரிஷபவாகனக்காட்சி.

4—5—90 வெள்ளி, திருக்கடவூர் காலசம்காரமூர்த்திக்குகாலை அபிசேகம் இரவு காலசம்காரம். அக்னிநக்ஷத்திரம் ஆரம்பம். 20-55

5—5—90 சனி, சர்வ ஏகாதசி, தருமை ஸ்ரீ ஞானாம்பிகை உடனாகிய ஸ்ரீஞானபுரீசுவரசுவாமிக்குமகோற்சவபூர்வாங்கம்சித்திரைப் பெருவிழாவில் திருக்கல்யாண உற்சவம்.

6—5—90 ஞாயிற, தருமைஸ்ரீஞானபுரீசுவரசுவாமிக்கு விழாமகோற்சவ துவஜாரோகணம். திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு துவக்கம். உமாபதிசிவம் குருபூசை.

7—5—90 திங்கள், சோமப் பிரதோஷம் - சித்திரைப் பெருவிழாவில் திருத்தேர். வேளூர் மஹாந்யாசபூர்வ ருத்ரஜப மண்டலாபிஷேகம் ஆரம்பம். இசைஞானியார் குருபூசை.

8—5—90 செவ்வாய், திருக்கடவூர், திருப்பனந்தாள், சீகாழி, திருவையாறு முதலிய திருத்தலங்களில் சைத்ரோத்ஸவ தீர்த்தம். திருக்குறிப்புத்தொண்டர் நாயனார் குருபூசை.

9—5—90 புதன், சித்ரா பௌர்ணமி. திருவையாறு சப்தஸ்தானம்.

10—6—90 வியாழன், தருமைஸ்ரீஞானாம்பிகைஉடனாகியஸ்ரீஞானபுரீசுவர சுவாமிக்கு சகோபுரரிஷபவாகனக் காட்சி.

12—5—90 சனி, தருமை ஸ்ரீ ஞானாம்பிகை உடனாகிய ஸ்ரீ ஞானபுரீசுவர

GNANASAMBANDAM
Regd. No. TN / M. M. 1
வெளிநாடு Regd. No. TN / M. M. 4

உ

சிவமயம்

தருமை ஆதீனம் சிறப்பு நிகழ்ச்சிகள்

ஆயில்யத் திருநாள் சிறப்பு வழிபாடு

2—5—90 புதன்கிழமை காலை கீழ்வேளூருக்கு அருகிலுள்ள தேவாரவைப்புத்திருத்தலம் கிள்ளிகுடி. (திருவிசைப்பாத்தலம்) திருச்சாட்டியக்குடி ஆகிய தலங்களில் நிகழும்.

பெரியபுராண அருளுரை

திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு - கருத்தரங்கம்

6—5—90 காலை தருமை ஆதீனத் திருமடத்தில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் முதல் ஞாயிறு தோறும் வழங்கி வரும் பெரியபுராண அருளுரையும், ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி பெருவிழா முதல்நாள் காலை நிகழும் திருநெறியதெய்வத் தமிழ் மாநாட்டின் கருத்தரங்கைத் தொடங்கிவைத்து ஆசியுரை வழங்கலும் நிகழும்.

அன்பர்கள் வந்து கேட்டுப் பயன் எய்துவார்களாக.

Printed & Published by V. Ramaiah Pillai, Manager, Dharmapuram, at the Gnanasambandam Press, Dharmapuram, Mayiladuthurai 10-4-90